# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2054 தை - மார்கழி (2023 சனவரி - திசம்பர்)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 17 | வெளியீடு: திசம்பர் 2024





# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 17

திருவள்ளுவர் ஆண்டு 2054 தை – மார்கழி (2023 சனவரி – திசம்பர்) | வெளியீடு: திசம்பர் 2024


செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தை அடிப்படையாகக்கொண்டு 12 புலங்களினூடாகக் (1.இலக்கியப் புலம், 2.மொழியியல் புலம், 3.மொழிபெயர்ப்புப் புலம், 4.அகராதியியல் புலம், 5.மொழிகள் பள்ளி, மொழிக்கல்விப் புலம், 6.வரலாறு, சமூகவியல், மாந்தவியல் புலம், 7.தொல்லியல் புலம், 8.சுவடியியல் புலம், 9.கல்வெட்டியல், நாணயவியல் புலம், 10.கலை, கட்டடவியல் புலம், 11.அயலகத் தமிழ்ப் புலம், 12.மொழித் தொழில்நுட்பப் புலம்) கீழ்க்காணும் முதன்மைத் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1. 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
2. பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்தல்
3. இணையவழியில் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
4. வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
5. வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
6. செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
7. பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
8. இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
9. செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்.

## பொருள் நிரல்


வாழ்த்துரை ..... 2

முதன்மை ஆசிரியர் உரை ..... 3

பாரத மொழிகளின் திருவிழா ..... 5

பயிலரங்குகள் ..... 11

கருத்தரங்குகள் ..... 28

புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் ..... 30

இலக்கண நூல்கள் – இரா. முத்துக்குமாரசாமி ..... 32

புத்தகக் காட்சிகள் ..... 34

கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது ..... 40

ஆய்வு உதவித்தொகைகள் ..... 40

நிறுவன விழாக்கள் ..... 41

மருத்துவ முகாம்கள் ..... 44

காசித் தமிழ்ச் சங்கமம் 2.0 ..... 45

அகத்தியர் நாள் விழா ..... 47

2023ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற நூல்கள் ..... 49



## ஆசிரியர் குழு

முதன்மை ஆசிரியர்

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

ஆசிரியர்

**முனைவர் ந. பெரியசாமி**

வடிவமைப்பு

**திரு. க. சங்கர்**



सत्यमेव जयते

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600 100.

தொலைபேசி: 044 – 22540125 | மின்னஞ்சல்: chemmozhi@cict.in | இணையம்: www.cict.in



## மாண்புமிகு பாரதப் பிரதமர்

# திரு. நரேந்திர மோடி அவர்களால் தமிழ்ச் செவ்விலக்கியப் பிரெயில் பதிப்பு நூல்கள், திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியீடு

*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் 41 தமிழ்ச் செவ்விலக்கிய நூல்கள், 5 இலக்கண நூல்கள் (நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், நம்பியகப்பொருள்) ஆகியவற்றின் புடையெழுத்துப் (பிரெயில்) பதிப்புகளையும், திருக்குறளின் பதினைந்து மொழிபெயர்ப்பு (அசாமி, அவதி, போஜ்புரி, போடோ, டோக்ரி, காஷ்மீரி, கொடவா, கொரகா, மைதிலி, துளு, பர்மியம், மொரிசியஸ் கிரியோல், மலாய், ஜப்பானியம், டேனிஷ்) நூல்களையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 17.12.2023 அன்று வாரணாசியில் நடைபெற்ற காசித் தமிழ்ச் சங்கமம் தொடக்க விழாவில் வெளியிட்டுச் சிறப்பித்தார்.*



**பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன்**
துணைத்தலைவர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.

# வாழ்த்துரை

*தமிழ் மொழிக்குச் செம்மொழித் தகுதியை மத்திய அரசு 2004ஆம் ஆண்டு வழங்கியது. அதன்பிறகு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தொடங்கப்பட்டுத் தமிழ் மொழிக்கான சீரிய பணிகளைச் சிறப்பாகச் செயற்படுத்தி வருகிறது. ஓலைச்சுவடிகளை மின்னாக்கம் செய்தல், தமிழ்ச் செவ்விலக்கியங்களின் முதற்பதிப்புகளை மின்னாக்கம் செய்தல், இணையவழிக் கல்வி, உ.வே.சா. செம்மொழித் தரவகம், இணைச் சொற்களஞ்சிய உருவாக்கம், உலக மொழிகளில் தமிழ்ச் செவ்விலக்கியங்களை மொழிபெயர்த்தல், செம்மொழித் தமிழ் மின்நூலகம், சிறந்த ஆய்வு நூல்களை வெளியிடல், செவ்விலக்கியங்களுக்கான செயலிகள் உருவாக்கம், இந்திய அறிவுமரபுகள் திட்டம், அகத்தியர் திட்டம் ஆகிய அரிய பணிகளை நிறுவனம் மேற்கொண்டு வருவது பாராட்டுதற்குரியது. திருக்குறளை நூற்றுஇருபது மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியினை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. செம்மொழி வலையொளியில் செவ்விலக்கியங்கள் குறித்த ஆய்வுரைகள் இடம்பெற்றுள்ளமை தமிழ் ஆய்வாளர்களுக்கு மட்டுமின்றித் தமிழ் ஆர்வலர்களுக்கும் பயன்நல்கக் கூடிய ஒன்றாகும்.*

*பேராசிரியர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் பல்வேறு பயிலரங்குகள், கருத்தரங்குகள், புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நிறுவனத்தில் நடத்தப்பட்டு வருவது ஆய்வாளர்களிடையே புதிய ஆய்வுக்களத்தை உருவாக்க வழிகோலும் என்பது திண்ணம். 41 தமிழ்ச் செவ்விலக்கிய நூல்கள், 5 இலக்கண நூல்கள் ஆகியவற்றின் புடையெழுத்துப் (பிரெயில்) பதிப்புகள் வெளியிடப்பட்டு, பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு விலையில்லாமல் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டு வருவது போற்றுதற்குரியது.*

*தமிழ்ச் செவ்விலக்கியங்களை உலக அளவில் கொண்டுசெல்லும் நோக்கில் நிறுவனம் பணியாற்றி வருவது மிகவும் பாராட்டுதற்குரியது. நிறுவனத்தின் பன்முகச் செயல்பாடுகளை உள்ளடக்கியதாகப் பதினேழாவது செய்திமடல் புதுப்பொலிவுடன் வெளிவரக்கூடிய இத்தருணத்தில் நிறுவன இயக்குநர், பதிவாளர் மற்றும் இம்மடலாக்கக் குழுவினருக்கும், நிறுவனப் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**சுதா சேஷய்யன்**




**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

இயக்குநர்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.


# முதன்மை ஆசிரியர் உரை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ் மொழியின் சிறப்புகளை உலக அளவில் கொண்டு செல்லும் நோக்கில் பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருகிறது. திருக்குறளை உலக மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடும் திட்டத்தின் வழியாக இதுவரை 35 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. 41 செவ்வியல் இலக்கியங்களும் 5 இலக்கண நூல்களும் புடையெழுத்துப் (பிரெயில்) பதிப்பாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல்கள் அனைத்தும் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு விலையில்லாமல் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. சமஸ்கிருத மொழி, மங்கோலிய மொழி, மலாய் மொழி, தாய் மொழி, ஜப்பானிய மொழி, சீன மொழி ஆகிய மொழிகளில் மணிமேகலை மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவைதவிரப் பல்வேறு ஆய்வுப்பரப்பில் இருபத்தைந்து ஆய்வு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் பயன்பெறும் வகையில் நிறுவனத்தில் இந்தாண்டு மட்டும் இருபது பயிலரங்குகளும், மூன்று கருத்தரங்குகளும், இரண்டு புத்தொளிப் பயிற்சி வகுப்புகளும் சிறப்பாக நடைபெற்றன. பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாக “என் மொழி என் கையொப்பம்”, “திருமூலர் நாள் விழா”, “பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி”, “கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி”, “பேச்சுப் போட்டி”, “அகத்தியர் நாள் விழா” ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன. அயல்நாட்டு மாணவர்களுக்குச் செம்மொழித் தமிழ்ப் பயிற்சி அளிக்கப்பட்டது. தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்திற்கு ஒலி வடிவ அலைபேசிச் செயலி வெளியிடப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் வகையில் நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

2023ஆம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஆற்றிய தமிழ்ப் பணிகளையும் நிறுவனத்தில் நடைபெற்ற அரிய நிகழ்வுகளையும் தாங்கி, இப்பதினேழாவது செம்மொழிச் செய்தி மடல் வெளிவருகிறது. இம்மடல் உருவாக்கத்தில் பங்காற்றிய ஆசிரியருக்கும், வடிவமைப்பாளருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.



# மத்தியக் கல்வி அமைச்சகத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நூல்கள் வெளியீடு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தமிழர் அளவை முறைகள், தமிழக மீனவர் தொழில் - பண்பாட்டுச் சொல்லகராதி, கால்நடை வளர்ப்புக் கலைச்சொல்லகராதி, Kuṟuntokai (French), Applied Linguistics Readings of Tolkāppiyam, கல்வெட்டுச் சொற்களின் பொருட்புல அடைவு, செம்மொழித் தமிழ் நூல்களில் தொன்மக் கூற்றுகளும் அவற்றின் கலை வடிவங்களும், தமிழ் இலக்கியமும் தமிழகத்துக் கலைப் படைப்புகளும், செவ்வியல் தமிழில் கிளைமொழிகள்: ஒரு வரலாற்று அளவீடு (தொல்காப்பியம், சங்க இலக்கியம்), சங்க இலக்கியத்தில் சைவ சமய மூலக் கூறுகள் ஆகிய பத்து நூல்களையும் மாண்புமிகு மத்தியக் கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அவர்கள் 29.07.2023 அன்று புதுதில்லியிலுள்ள பாரத மண்டபத்தில் நடைபெற்ற தேசியக் கல்விக் கொள்கை உருவாக்கத்தின் மூன்றாமாண்டு விளக்கக் கூட்ட விழாவில் வெளியிட்டுச் சிறப்பித்தார். இவ்விழாவில் மாண்புமிகு மத்தியக் கல்வி இணை அமைச்சர் மருத்துவர் சுபாஷ் சர்க்கார், மத்தியக் கல்வி அமைச்சகத்தின் செயலாளர் திரு. கே. சஞ்சய் மூர்த்தி, மத்தியக் கல்வி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு. எஸ். கே. பர்ன்வால், பாரத மொழிகளின் குழுத் தலைவர் பத்மஸ்ரீ முனைவர் சாமு கிருஷ்ண சாஸ்திரி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பாரத மொழிகளின் திருவிழா
# भारतीय भाषा उत्सव
# BHARATIYA BHASHA UTSAV




இந்திய நாட்டையும் அதன் பெருமையையும் தலைமேற் கொண்டாடிய, தமிழ்த் தாயின் தவப்புதல்வராக விளங்கிய மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த நாளான டிசம்பர் 11ஆம் நாளை 2022ஆம் ஆண்டு முதல் ‘பாரத மொழிகளின் நாள்’ என இந்திய அரசு கொண்டாடி வருகிறது. இந்த நாளை முன்னிட்டு ‘இந்திய மொழிகளின் வேற்றுமையில் ஒற்றுமை’யை நாட்டின் எதிர்கால இளைஞர்களின் இதயங்களில் ஆழமாக வேரூன்றச் செய்வதற்காக இந்திய அரசு பாரத மொழிகளின் திருவிழாவினைக் கொண்டாடி வருகிறது. இதனையே ‘பன்மொழியியம்’ (multilingualism) என்பதாகப் புதிய கல்விக் கொள்கையிலும் நடுவணரசு ஊக்கப்படுத்தி நடைமுறைப்படுத்தியுள்ளது.

‘ஒரே பாரதம் உன்னத பாரதம்’ என்ற உயர்ந்த குறிக்கோளிற்கான புதுமுயற்சியாகப் ‘பாரத மொழிகளின் திருவிழா’வானது ‘‘மொழிகள் பல; உணர்வு ஒன்றே’’ என்ற முழக்கத்துடன் 2023 செப்டம்பர் 28 முதல் 2023 டிசம்பர் 11ஆம் நாள் வரை 75 நாள்களுக்குக் கொண்டாடப்பட்டது. இதன் முதல் நிகழ்வாக ‘என்மொழி என் கையொப்பம்’ செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் கொண்டாடப்பட்டது.

## 1 என் மொழி என் கையொப்பம்

பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகப் பாரத மொழிகளின் பன்முகத் தன்மையின் பெருமையினையும் சிறப்பினையும் மரபினையும் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிவிக்கும் வகையில் ‘‘என் மொழி என் கையொப்பம்’’ (My language my signature) என்ற பொருண்மையில் 31.10.2023 அன்று நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி உள்ளிட்ட நிகழ்ச்சிக்கு வருகைபுரிந்த நிறுவனப் பணியாளர்கள், தமிழ் ஆய்வாளர்கள், தமிழறிஞர் பெருமக்கள் ஆகிய அனைவரும் தாய்மொழியில் கையொப்பமிட்டனர்.










## 2 திருமூலர் நாள் விழா

தமிழ்ச் சித்தர்கள் மரபில் தலையானவராக வைத்துப் போற்றப்படுபவரும் ‘உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பு ஆலயம்’, ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’, ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’, ‘என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே’, ‘ஞானமுண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே’ என்றெல்லாம் செப்பிய தமிழ் ஆகமமான மூவாயிரம் பாடல்களைக் கொண்ட ‘திருமந்திரம்’ என்ற நூலைப் படைத்தளித்த ‘திருமூலருக்கு’ அவரின் திருநட்சத்திரமான ஐப்பசி அசுவனி நாளையொட்டித் ‘திருமூலர் நாள்’ விழா 31.10.2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் பெருஞ்சிறப்புடன்





கொண்டாடப்பெற்றது. பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற இவ்விழாவைத் தொடர்ந்து, ஒரு நாள் கருத்தரங்கின் மூன்று அமர்வுகளிலும் பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். கருத்தரங்கின் இறுதி அமர்வில் 'யோகம் - செயல்முறை விளக்கப் பயிற்சி'யும் 'மறைமொழி தவம்' என்ற திறன்வளர் தவப் பயிற்சியும் மருத்துவர் முனைவர் ப. செல்வசண்முகத்தால் அளிக்கப்பட்டது. உள்ளம்-உடல் ஆற்றலை ஒருமுகப்படுத்தித் திறன்வளர்க்கும் புத்துணர்ச்சிக் கலையாகவும் திருமூலர் நாள் விழாவின் முத்தாய்ப்பாகவும் இப்பயிற்சி அமைந்தது.

கருத்தரங்கின் தொடக்க விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் மேனாள் பேராசிரியர் அரங்க. இராமலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் த. சரவணனும் இணை ஒருங்கிணைப்பாளராகத் தரவு உள்ளீட்டாளர் திரு. தி.ஞா. அருள்ஒளியும் செயல்பட்டனர்.

## 3 செம்மொழி நூலகத்தில் எண்ணிம உருமாற்றக் கருவிகளின் பயன்பாடு






பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகச் 'செம்மொழி நூலகத்தில் எண்ணிம உருமாற்றக் கருவிகளின் பயன்பாடு' குறித்த ஒரு நாள் கருத்தரங்கம் 01.11.2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் நான்கு அமர்வுகளிலும் பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். கருத்தரங்கின் தொடக்க விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னை, பச்சையப்பன் கல்லூரியின் மேனாள் நூலகர் பேராசிரியர் பா. பெருமாள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன நிரலாளர் திரு. த. செந்தில்குமாரும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆய்வு வளமையர் திரு. கி. கண்ணனும் செயல்பட்டனர்.

## 4 உலக எண்ணிமப் பாதுகாப்பு நாள் கருத்தரங்கம்



பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாக 'உலக எண்ணிமப் பாதுகாப்பு நாள்' குறித்த ஒரு நாள் கருத்தரங்கம் 02.11.2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் நான்கு அமர்வுகளிலும் பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். கருத்தரங்கின் தொடக்க விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். இந்திய அரசின் பிரதமரின் ஊடகப் பிரிவின் இணை இயக்குநர் (ஊடகம் மற்றும் தகவல்தொடர்பு) திரு. அருண்குமார், இ.த.ப., சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன நிரலாளர் திரு. த. செந்தில்குமாரும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆய்வு வளமையர் திரு. கி. கண்ணனும் செயல்பட்டனர்.

## 5 பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி

பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி குறித்த அறிவிப்பை 03.11.2023 அன்று வெளியிட்டது. தமிழக நாட்டுப்புற மரபுகள் என்னும் பொருண்மையில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் 'தமிழர் கலைகள்' என்ற தலைப்பிலும், ஒன்பது முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் 'நாட்டுப்புறத் தெய்வங்கள்' என்ற தலைப்பிலும், பதினொன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் 'தமிழர் விளையாட்டுகள்' என்ற தலைப்பிலும் ஓவியங்களை வரைந்து, 30.11.2023ஆம் நாளுக்குள் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பெற்றது. தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த ஓவியத்திற்கு ஒவ்வொரு பிரிவிலும் முதற்பரிசாக ஒருவருக்கு ரூபாய் பத்தாயிரமும், இரண்டாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் ஏழாயிரமும், மூன்றாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் ஐந்தாயிரமும், ஆறுதல் பரிசாக ஐவருக்கு ரூபாய் மூன்றாயிரமும் வழங்க நிறுவனம் அறிவித்தது.

ஓவியப் போட்டிக்காக வரப்பெற்ற ஓவியங்களிலிருந்து பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வுக் குழுக் கூட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 13.12.2023, 14.12.2023 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தை நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் அ. ஆரோக்கியதாசு ஒருங்கிணைத்தார். இக்குழுக் கூட்டத்தில் ஓவியப் போட்டியின் வெற்றியாளர்கள் தேர்வுசெய்யப்பட்டனர். அவர்களின் விவரங்கள் கீழ்வருமாறு:

### ஆறு, ஏழு, எட்டாம் வகுப்பு மாணவர்கள்: தமிழர் கலைகள்

**முதல் பரிசு:**

மு. தேவ் தர்சன், ஏழாம் வகுப்பு, விகாசா ஜூபிலி பள்ளி, மதுரை.

**இரண்டாம் பரிசு:**

ஆ. அமலன் ஆரோலின், ஆறாம் வகுப்பு, தூய மரியன்னை மெட்ரிகுலேசன் பள்ளி, பசுபதி கோவில், தஞ்சாவூர்.

**மூன்றாம் பரிசு:**

வெ. ராஜேஸ்வரி, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ ஆர்.கே.எம். சாரதா வித்யாலயா மகளிர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

**ஆறுதல் பரிசுகள்:**

1. கோ. தனுஷா தேவி, எட்டாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, முகப்பேர் கிழக்கு, சென்னை.
2. மு. சந்தோஷ், எட்டாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, முகப்பேர் கிழக்கு, சென்னை.
3. மு. சுபஸ்ரீ, ஆறாம் வகுப்பு, தூய மைக்கேல் அகாடமி, நாகப்பட்டினம்.
4. கே. கிருபாகரன், ஏழாம் வகுப்பு, ஸ்ரீனிவாசா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை.
5. எஸ். யாழினி, ஆறாம் வகுப்பு, அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கீரனூர்.

### ஒன்பது, பத்தாம் வகுப்பு மாணவர்கள்: நாட்டுப்புறத் தெய்வங்கள்

**முதல் பரிசு:**

பா. நாகேஸ்வரன், பத்தாம் வகுப்பு, கொங்கு மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, ஊத்துக்குளி, திருப்பூர்.

**இரண்டாம் பரிசு:**

சே. கஸ்தூரி, பத்தாம் வகுப்பு, பரணி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, கரூர்.

**மூன்றாம் பரிசு:**

இரா. சர்வேஸ், ஒன்பதாம் வகுப்பு, எஸ்.ஆர்.எம். பொதுப் பள்ளி, துறையூர்.

**ஆறுதல் பரிசுகள்:**

1. எஸ். தஸ்லீமா, பத்தாம் வகுப்பு, முருக தனுஷ்கோடி பெண்கள் உயர்நிலைப் பள்ளி, சென்னை.
2. சு. பிரியதர்ஷினி, பத்தாம் வகுப்பு, ஆறுபடை வீடு மெட்ரிகுலேசன் பள்ளி, திருப்போரூர்.
3. எஸ். பரதன் பிள்ளை, ஒன்பதாம் வகுப்பு, கேந்திரிய வித்யாலயா, ஓ.சி.எப், ஆவடி, சென்னை.
4. ஆர்.ஏ. பாலஜீவன், ஒன்பதாம் வகுப்பு, ப.செ.க.க. அரசு மேல்நிலைப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை.
5. கே. காவ்யஸ்ரீ, பத்தாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி, சென்னை.

### பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள்: தமிழர் விளையாட்டுகள்

**முதல் பரிசு:**

சி. மோகன் ராம், பன்னிரண்டாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

**இரண்டாம் பரிசு:**

ரெ. ஸ்ரீதர் பிரசாத், பன்னிரண்டாம் வகுப்பு, வி.எம். அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, தேனி.

**மூன்றாம் பரிசு:**

ச.சு. அபிஷேக், பதினொன்றாம் வகுப்பு, முன்சிறை புனித ஆரோக்கியமாதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கன்னியாகுமரி.

**ஆறுதல் பரிசுகள்:**

1. மு. ஜனனி, பதினொன்றாம் வகுப்பு, எம்.ஆர்.ஆர்.எம்.ஏ.வி.எம்.எம். மேல்நிலைப் பள்ளி, மதுரை.
2. பி.எஸ். சாய் அருண், பதினொன்றாம் வகுப்பு, சென்னைக் கிறித்தவக் கல்லூரிப் பள்ளி, கிழக்குத் தாம்பரம்.
3. டி. ஏவாஞ்சலின் ஜூடித், பதினொன்றாம் வகுப்பு, ஆர்.எம். ஜெயின் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.
4. கே.எஸ். பூமிகா, பதினொன்றாம் வகுப்பு, பாரதியார் நூற்றாண்டு அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை, திருப்பூர்.
5. எஸ். தரிகா, பதினொன்றாம் வகுப்பு, பாரதி வித்யா பவன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு.

## 6 கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி குறித்த அறிவிப்பை 03.11.2023 அன்று வெளியிட்டது. தமிழக நாட்டுப்புற மரபுகள் என்னும் பொருண்மையில் இளங்கலைப் பட்ட மாணவர்கள் ‘தமிழர் கலை மரபுகள்’ என்ற தலைப்பிலும், முதுகலைப் பட்ட மாணவர்கள் ‘தமிழர் வாழ்வியல் மரபுகள்’ என்ற தலைப்பிலும் கட்டுரைகளை எழுதி, 30.11.2023ஆம் நாளுக்குள் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பெற்றது. தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைக்கு ஒவ்வொரு பிரிவிலும் முதற்பரிசாக ஒருவருக்கு ரூபாய் பத்தாயிரமும், இரண்டாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் ஏழாயிரமும், மூன்றாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் ஐந்தாயிரமும், ஆறுதல் பரிசாக ஐவருக்கு ரூபாய் மூன்றாயிரமும் வழங்க நிறுவனம் அறிவித்தது.

கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து கட்டுரைப் போட்டிக்காக வரப்பெற்ற தொள்ளாயிரத்திற்கும் மேற்பட்ட கட்டுரைகளிலிருந்து பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கான முதல்நிலைத் தேர்வுக் குழுக் கூட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 13.12.2023, 14.12.2023 ஆகிய இரண்டு நாட்களும், இரண்டாம் நிலைத் தேர்வுக் குழுக் கூட்டம் 15.12.2023 அன்றும் நடைபெற்றன. இக்கூட்டத்தை நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் அ. ஆரோக்கியதாசு ஒருங்கிணைத்தார். இக்குழுக் கூட்டத்தில் கட்டுரைப் போட்டியின் வெற்றியாளர்கள் தேர்வுசெய்யப்பட்டனர். அவர்களின் விவரங்கள் கீழ்வருமாறு:

### இளங்கலைப் பட்ட மாணவர்கள்: தமிழர் கலை மரபுகள்

**முதல் பரிசு:**

ரெ. ஸ்ரீநிதி, வணிகவியல் துறை, வேல்டெக் பல்கலைக்கழகம், ஆவடி.

**இரண்டாம் பரிசு:**
ரா. பிரியங்கா, மனையியல் துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்.

**மூன்றாம் பரிசு:**
த. மதுமிதா, வணிகவியல் துறை, பி.எஸ். அப்துர் ரஹ்மான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், வண்டலூர், சென்னை.

**ஆறுதல் பரிசுகள்:**

1. பா. அட்சயா, இரண்டாமாண்டு, தமிழ்த் துறை, லதா மாதவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை.
2. பி. மதுபாலா, முதலாமாண்டு, செவிலியர் பட்டம், கே.ஜி. செவிலியர் கல்லூரி, கோயம்புத்தூர்.
3. அ. பேபி ஷாலினி, முதலாமாண்டு, இளங்கல்வியியல், தமிழ்த்துறை, வ.உ.சி. கல்வியியல் கல்லூரி, தூத்துக்குடி.
4. வே. நிரளி, முதலாமாண்டு, இளங்கல்வியியல், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி, சேலம்.
5. ம. வைதீஸ்வரி, இரண்டாமாண்டு, கணிதத் துறை, தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி, கரந்தை, தஞ்சாவூர்.

### முதுகலைப் பட்ட மாணவர்கள்: தமிழர் வாழ்வியல் மரபுகள்

**முதல் பரிசு:**
பி. பொன்ஹர் ஷிதா, தரவு அறிவியல் துறை, தியாகராஜர் பொறியியற் கல்லூரி, மதுரை.

**இரண்டாம் பரிசு:**
இர. திவ்யா, இரண்டாமாண்டு, கணிதத் துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு.

**மூன்றாம் பரிசு:**
சே. வேண்டா, தமிழ் இலக்கியத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

**ஆறுதல் பரிசுகள்:**

1. வ. ஹரினி, முதலாமாண்டு, உணவு அறிவியல் மற்றும் சத்தியல் துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்.
2. க. மீனா, இரண்டாமாண்டு, தமிழ்த் துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேந்தமங்கலம், நாமக்கல்.
3. ஆ. பாலசுப்பிரமணி, இரண்டாமாண்டு, இலக்கியத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. ப. கலிமுருகன், இரண்டாமாண்டு, ஆங்கிலத் துறை, அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), நந்தனம், சென்னை.
5. இர. இராஜேஸ்வரி, முதலாமாண்டு, கணிதத் துறை, சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## 7 கலை மற்றும் அறிவியல், பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி

பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகவும், மகாகவி பாரதியாரின் பிறந்த நாளை முன்னிட்டும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் கலை மற்றும் அறிவியல், பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி குறித்த அறிவிப்பை 17.11.2023 அன்று வெளியிட்டது. ‘பாருக்குள்ளே நல்ல நாடு, எங்கள் பாரத நாடு’ என்ற தலைப்பைப் பேச்சுப் போட்டியின் மையக்கருவாகக் கொண்டு, பாரதியாரின் தேசிய ஒருமைப்பாட்டுச் சிந்தனையை எதிர்காலத் தலைமுறையினர் அறிந்துகொண்டு செயலாற்ற வேண்டும் என்ற நோக்கில் இப்போட்டியைக் கல்லூரிகளில் நடத்த வேண்டுமென்று நிறுவனம் கேட்டுக்கொண்டது. போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதற்பரிசாக ஒருவருக்கு ரூபாய் ஐந்தாயிரமும், இரண்டாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் மூன்றாயிரமும், மூன்றாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் இரண்டாயிரமும் வழங்க நிறுவனம் அறிவித்தது. அவ்வறிவிப்பின்படி பேச்சுப் போட்டியை நடத்துவதற்காகக் கல்லூரிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களில் 120 கல்லூரிகள் தேர்வுசெய்யப்பட்டு, அதற்கான ஆணை வழங்கப்பட்டது.

நிறுவனத்தின் இணையத்தள முகவரி - www.cict.in

## பதிவாளர் பொறுப்பேற்பு





செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பதிவாளராக முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்கள் 23.03.2023 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் அவர்கள் பூங்கொத்து அளித்து வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## நிதி அலுவலர் பொறுப்பேற்பு





செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி அலுவலராகத் திரு. ஆ. குமரேசன் அவர்கள் 28.06.2023 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் அவர்கள் பொன்னாடையும், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்கள் பூங்கொத்தும் அளித்து வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்வில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## பயிலரங்கம் 1

# தொல்காப்பிய மொழியியல்







தமிழில் கிடைத்துள்ள முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள நவீன மொழியியலின் பல்வேறு வகைமைகளை ஆய்ந்து, அவற்றை எடுத்துரைக்கும் நோக்கில் 'தொல்காப்பிய மொழியியல்' என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 01.02.2023 முதல் 07.02.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. பதினாறு ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் தொல்காப்பியத்தின் பல்வேறுபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தின் மேனாள் இயக்குநர் பேராசிரியர் பி. கணேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், சென்னை, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் ந. பஞ்சநதம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் மு. செல்வதுரையும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சுப. வேல்முருகனும் செயல்பட்டனர்.

---

## பயிலரங்கம் 2

# வட்டார வழக்குகளில் செவ்வியல் கூறுகள்






மொழியானது பேசுகின்ற ஒவ்வொருவரின் தனித்தன்மைக்கேற்பவும் இடம், காலம், சூழ்நிலைகளுக்கேற்பவும் சிற்சில வேறுபாடுகளுடன் காலந்தோறும் மாறும் இயல்புடையது. இவ்வியல்புகளைக் கொண்ட தமிழ்மொழியானது பல்வேறு மொழிகளுக்குத் தாய்மொழி, மூத்தமொழி, இலக்கண இலக்கிய வளமிக்க மொழி

என்ற பெருமைகளைத் தன்னகத்தே கொண்டது. புவியியல் அமைப்பால் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்களின் பேச்சு வழக்குகளில் காலந்தோறும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இப்பேச்சு வழக்குச் சொற்கள் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபட்டு வட்டார வழக்குச் சொற்களுக்கு வித்திட்டன. வட்டார வழக்குச் சொற்களில் செவ்வியல் கூறுகள் இடம்பெற்றுள்ளதை எடுத்துரைக்கும் நோக்கில் 'வட்டார வழக்குகளில் செவ்வியல் கூறுகள்' என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 15.02.2023 முதல் 21.02.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபது ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுத்தலைப்புகளில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.



பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். எழுத்தாளர் திரு. கண்மணி குணசேகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், சென்னைக் கிறித்துவக் கல்லூரித் தமிழ்த்துறை மேனாள் இணைப்பேராசிரியர் முனைவர் சா. பாலுசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சு. ஏழுமலையும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்டும் செயல்பட்டனர்.

---

**பயிலரங்கம் 3**

## மூலபாடத் திறனாய்வு: தமிழ்ச் செவ்வியல் நூல்களில் ஒலியியல் / எழுத்தியல் வேறுபாடுகள்






பாடம் என்பது படிப்பதற்குரிய ஆக்கத்தைக் குறிக்கும். மூலபாடம், உரைப்பாடம் எனப் பாடம் இருவகைப்படும். மூலபாடம் என்பது மூல ஆசிரியரால் எழுதிய உரையில்லாத நூலைக் குறிப்பதாகும். அம்மூல நூலிற்குப் பொருள் விளங்கிக்கொள்ள முடியாத நிலையில் உரையாசிரியர்களால் உரை எழுதப்பட்டது. அந்நூல் மூலத்துடன் இருந்தாலும் உரைப்பாடம் என்றே அழைக்கப்பட்டது. தமிழில் மூலபாட ஆய்வு பழைய உரையாசிரியர் காலத்திலேயே இருந்துள்ளது. உரையாசிரியர்களைத் தொடர்ந்து ஏட்டுச் சுவடியில் இருந்த நூல்களை அச்சில் பதிப்பித்த பதிப்பாசிரியர்களும் மூலபாட ஆய்வை மேற்கொண்டுள்ளனர். மூலபாடத் திறனாய்வின் இன்றியமையாமையை உணர்த்தும் வகையில் 'மூலபாடத் திறனாய்வு: தமிழ்ச் செவ்வியல் நூல்களில் ஒலியியல் / எழுத்தியல் வேறுபாடுகள்' என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 22.02.2023 முதல் 28.02.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. பதினாறு ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறுபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். நந்தனம், அரசினர் ஆடவர் கலைக் கல்லூரித் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் க. பலராமன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், தஞ்சாவூர், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரிப் பேராசிரியர் புலவர் இரா. கலியபெருமாள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம் ஒருங்கிணைப்பாளராகவும் ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணி இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

## பயிலரங்கம் 4

# இயற்கை மொழி ஆய்வில் செம்மொழித் தமிழ்








மனிதர்கள் பேசும் மொழி இயற்கை மொழி. இவ்வியற்கை மொழியினைக் கணினியின் துணைகொண்டு மேற்கொள்ளும் ஆய்வுகளை இயற்கை மொழி ஆய்வு எனலாம். இது கணினி மொழியியல், இணையவழிக் கல்வி, தரவக உருவாக்கம், மின்னகராதி உருவாக்கம், இயந்திர மொழிபெயர்ப்பு, சொல் திருத்தி, இலக்கணத் திருத்தி, தேடுபொறி போன்ற ஆய்வுகளை உள்ளடக்கியது. தொழில்நுட்பக் கூறுகளைப் பயன்படுத்திச் செவ்வியல் இலக்கண, இலக்கியங்களை இயற்கை மொழி ஆய்விற்கு உட்படுத்தி, மென்பொருள் உருவாக்கம் மற்றும் புதிய மொழியாய்வுக் களங்கள் குறித்து அறிந்துகொள்ளும் நோக்கில் ‘இயற்கை மொழி ஆய்வில் செம்மொழித் தமிழ்’ என்னும் பத்து நாள் பயிலரங்கம் 14.03.2023 முதல் 23.03.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தாறு ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் இயற்கை மொழியாய்வின் பல்வேறுபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். தொடக்க விழாவில் பாரீஸ் பல்கலைக்கழக வரலாற்றியல் மற்றும் செவ்வியல் மொழித்துறை உயராய்வு மையப் பேராசிரியர் அப்பாசாமி முருகையன் சிறப்பு விருந்தினராகவும், நிறைவு விழாவில் மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் மேனாள் துணை இயக்குநர் பேராசிரியர் பொன் சுப்பையா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவியும், இணை ஒருங்கிணைப்பாளர்களாக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோரும் செயல்பட்டனர்.

## பயிலரங்கம் 5

# ஜெர்மனி, கொலொன் பல்கலைக்கழக இந்தியவியல் மாணவர்களுக்கான செம்மொழித் தமிழ்ப் பயிற்சி வகுப்பு






ஜெர்மனி கொலொன் பல்கலைக்கழக இந்தியவியல் மற்றும் தமிழ் ஆய்வுத் துறை மாணவர்களுக்குத் தமிழ் மொழி, பண்பாடு குறித்த கோடைக் காலப் பயிற்சி வகுப்பு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 06.03.2023 முதல் 24.03.2023 வரை பத்தொன்பது நாட்கள் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்ற பேராசிரியர்களால் பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ், தமிழ்ப் பண்பாடு குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி வகுப்பின் தொடக்க விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமை உரையாற்றினார். நிறைவு விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் ஆய்வு மாணவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தனர்.

---

## பயிலரங்கம் 6

# தில்லிப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களுக்குச் செம்மொழித் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்துதல்






தில்லிப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களுக்குச் செம்மொழித் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் ஏழு நாள் பயிலரங்கம் 22.03.2023 முதல் 28.03.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இப்பயிலரங்கில் தில்லிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இருபத்தெட்டு ஆய்வு மாணவர்கள் பங்கேற்றனர். பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் செம்மொழித் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். புதுதில்லி, தில்லிப் பல்கலைக்கழக நவீன இந்திய மொழிகள் துறைப் பேராசிரியர் தி. உமாதேவி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், புதுவை அருங்காட்சியகத்தின் இயக்குநரும் தேசிய மரபு அறக்கட்டளையின் தலைவருமான திரு. அ. அறிவன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரியும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் மா. சுசிலாவும் செயல்பட்டனர்.

பயிலரங்கம் 7

# தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் சொற்பொருண்மை






சுவடிகளில் எழுதப்பட்ட சொற்கள் பதிப்பிக்கப்படும்பொழுது ஒலி அமைப்பிலும் சொல் அமைப்பிலும் பொருண்மை நிலையில் பல வேறுபாடுகள் உருவாகின்றன. இவ்வாறான பாடவேறுபாடுகளால் செவ்வியல் சொற்களின் பொருண்மையும் தனித்தன்மையும் சிதைந்து பொருள் வேறுபாடு உண்டாகின்றது. செய்யுளின்வழி ஆசிரியர் தான் கூறவந்த கருத்துகளை அறுதியிட்டுக் கண்டறிய அவர்களின் சொல்லாட்சியும் சொற்பொருண்மையும் செய்யுளில் அமையப்பெற்ற சூழலும் மிகவும் இன்றியமையாதவை. அகம், புறம், திணை அடிப்படையிலும் சொற்பொருண்மைகள் விளக்கப்படுகின்றன. பாடவேறுபாட்டில் உள்ள பாடத்தேர்வினை உறுதி செய்வதற்கு இத்தகைய சொல்லாட்சிகளில் உள்ள நுண்ணிய பொருண்மைகள் மிகவும் பயன்படுகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் சொல், பொருள், அதன் மாற்றம் ஆகிய கருத்தியல்களைப் பன்முக நோக்கில் ஆய்ந்து, செவ்வியல் இலக்கியச் சொற்பொருண்மையின் விழுமியங்களை எடுத்துரைக்கும் நோக்கில் ‘தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் சொற்பொருண்மை’ என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 24.05.2023 முதல் 30.05.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபது ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் சொற்பொருண்மை குறித்த தலைப்புகளில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.



பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். திருவாரூர், தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ச. ரவி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் ப. இராஜேஷ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர்

முனைவர் இரா. அருள்மணி ஒருங்கிணைப்பாளராகவும் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ம. தமிழ்வாணன் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

பயிலரங்கம் 8

## தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வு நெறிமுறைகள்









மிகப் பழமையான இலக்கிய, இலக்கண வளங்களைப் பெற்று, உலக மொழிகள் பலவற்றுள்ளும் உயர்தனிச் செம்மொழியாகத் தமிழ் மொழி திகழ்கின்றது. ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முன்னர் தோன்றிய செழுமையான இவ்விலக்கியங்கள் குறித்துக் கால வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் புதுப்புதுச் சிந்தனைகளைச் செலுத்தியும் பல்வேறு ஆய்வு முறைகளைக் கொண்டும் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. தமிழ் மரபார்ந்த கோட்பாட்டு நோக்கிலும், மேலை இலக்கியக் கோட்பாட்டு நோக்கிலும் பல புதிய ஆய்வுகள் வெளிவந்துள்ளன. தமிழியல் ஆய்வு மரபை முறையாக நெறிப்படுத்தவும், வளப்படுத்தவும் கருத்திற்கொண்டு தமிழ்ச் செவ்விலக்கியங்கள் குறித்த ஆய்வு நெறிமுறைகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் ‘தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வு நெறிமுறைகள்’ என்னும் பத்து நாள் பயிலரங்கம் 06.06.2023 முதல் 15.06.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் செவ்விலக்கிய ஆய்வு நெறிமுறைகள் குறித்துத் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளரும் (பொறுப்பு) அறிவியல் தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் சி. தியாகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், கும்பகோணம் அரசு கல்லூரித் தமிழ்த்துறையின் மேனாள் பேராசிரியர் சாமி. தியாகராசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. வெங்கடேசனும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சி. இராமச்சந்திரனும் செயல்பட்டனர்.

### தமிழ்ச் செவ்விலக்கியங்கள் - மலையாள மொழிபெயர்ப்புத் திட்ட மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டுவரும் மலையாள மொழிபெயர்ப்புக்கான திட்டப் பணிகளை மதிப்பீடு செய்வதற்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 19.06.2023 அன்று நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர் சி.ஜி. ராஜேந்திர பாபு வல்லுநராகக் கலந்துகொண்டு மொழிபெயர்ப்புப் பணிகளை மதிப்பீடு செய்தார். நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரி இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

## பயிலரங்கம் 9

# தமிழர் மரபில் இசைக்கருவிகள்









தமிழ்ச் செவ்விலக்கியங்களில் சங்க கால மக்கள் பயன்படுத்திய இசைக்கருவிகள் பற்றிய பல்வேறு செய்திகள் காணப்படுகின்றன. இசைக்கருவிகளைத் தரத்திற்குத் தக்கவாறு, இடத்திற்கு ஏற்றவாறு பாகுபடுத்தி, அவற்றிற்குப் பண் அமைத்துக் காலங்காலமாகப் பின்பற்றியும், காப்பாற்றியும் வந்துள்ள தமிழர்தம் புலமை சிறப்பிற்குரியது. கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ் இசைக்கலை குறித்த ஆய்வுகள் பெருமளவில் நடைபெற்று, தமிழிசையின் தனித்துவமான சிறப்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. சங்க கால இசைக்கருவிகளின் தோற்றம், மரபிசை முறை, தனித்தன்மை, வளர்ச்சி நிலை போன்றவற்றை எடுத்துரைக்கும் நோக்கில் 'தமிழர் மரபில் இசைக்கருவிகள்' என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 16.06.2023 முதல் 22.06.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபது ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறுபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறைப் பேராசிரியர் தி. அருட்செல்வி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் பேராசிரியர் ப. மருதநாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கூ.மு. புவனேஸ்வரியும் இணை ஒருங்கிணைப்பாளராக ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணியும் செயல்பட்டனர்.

## பயிலரங்கம் 10

# செம்மொழித் தரவக மதிப்பீட்டாய்வுப் பயிலரங்கம் - 1

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நாற்பத்தொரு தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கான செம்மொழித் தமிழ்த் தரவகம் உருவாக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. மொழித் தொழில்நுட்பப் புலம் சார்ந்து நாற்பத்தொரு நூல்களில் இருபது நூல்களுக்கு ஏற்கெனவே, உ.வே.சா. செம்மொழித் தமிழ்த் தரவகத்தினை







உருவாக்கி இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து மீதமுள்ள இருபத்தொரு நூல்களுக்கும் துறையில் உருவாக்கப்பெற்ற சொற்பிரிப்புக் கருவியின் துணைகொண்டு சந்தி பிரித்த பாடம், சொற்பிரித்த பாடம் ஆகியன பிரிக்கப்பெற்றன. இவ்விருபத்தொரு நூல்களையும் இணையத்திலுள்ள தரவகத்தில் சேர்ப்பதற்குமுன் பிரிக்கப்பெற்ற பகுதிகளை வல்லுநர் குழுவால் மதிப்பீடு செய்வதற்காக மொழிகள் பள்ளி மற்றும் மொழிக் கல்வியியல் புலம் & மொழித் தொழில்நுட்பப் புலத்தின் சார்பில் 'செம்மொழித் தரவக மதிப்பீட்டாய்வுப் பயிலரங்கம் - 1' செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 13.06.2023 முதல் 17.06.2023 வரை நடைபெற்றது.

இப்பயிலரங்கில் புறநிலை வல்லுநர்களாக முனைவர் வ. தனலட்சுமி (இணைப் பேராசிரியர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம்), முனைவர் ச.பொ. சீனிவாசன் (இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகக் கல்லூரி, பாளையம், திருவனந்தபுரம்), முனைவர் கோ. பழனிராஜன் (உதவிப் பேராசிரியர், மொழியியல் துறை, கேரள மத்தியப் பல்கலைக்கழகம், காசர்கோடு) ஆகியோரும் துறைசார் வல்லுநர்களாக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

---

**பயிலரங்கம் 11**

# தமிழ் மருத்துவ மரபுகள்







செம்மொழித் தமிழின் தனித்தன்மை வாய்ந்த சிறப்புகளுள் ஒன்று சித்த மருத்துவம். மனித இனத்தின் அகப்புற நல வாழ்விற்கும் போற்றுதலுக்கும் உரியதாக விளங்குவது தமிழ் மருத்துவ மரபாகும். தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள் முதலான செவ்வியல் நூல்கள் பல அரிய மருத்துவச் செய்திகளைக் கூறுகின்றன. ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகிய நூல்கள் தமிழ் மருத்துவத்தின் பெயராலேயே விளங்குகின்றன. உலக



மருத்துவத்தில் தமிழ் மருத்துவத்திற்கென்றே பல சிறப்புகளும் தனித்தன்மைகளும் உண்டு. உலகில் இன்றளவும் மரபு அறுபடாமல் வழக்கில் உள்ள மருத்துவ முறைகளில் தமிழ் மருத்துவமும் ஒன்று. உலகில் வேறெந்தத் தொன்மையான மருத்துவ முறைகளிலும் காணப்படாத இரசவாதம், பற்பம், பாசாணம், செந்தூரம் போன்ற மருந்தியல் முறைகள் தமிழ் மருத்துவத்தில் மாத்திரமே உள்ளன. வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்னும் வகைமைகளைக் கொண்ட தமிழ் மருத்துவ மரபுகளின் தொன்மை, தனித்தன்மை பற்றியதாக 'தமிழ் மருத்துவ மரபுகள்' என்னும் பத்து நாள் பயிலரங்கம் 11.07.2023 முதல் 20.07.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. முதுகலைச் சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களும் சித்த மருத்துவத்தில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்களுமாக 25 பேர் இப்பயிலரங்கில் கலந்துகொண்டனர். இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் பல்வேறுபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரையும் பயிற்சியும் வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னை, தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் உடற்கூற்றியல் புலத்தலைவரும் பேராசிரியருமான பி.ஆர். செந்தில்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், சென்னை, சித்த மருத்துவக் கல்லூரியின் முதல்வரும் மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தின் மேனாள் தலைமை இயக்குநருமான பேராசிரியர் கே. கனகவல்லி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். நிறுவன நிதிநல்கையுடன் மருத்துவர் முனைவர் ப. செல்வசண்முகம் அவர்கள் எழுதிய "உடலினை உறுதிசெய்யத் திருமூலர் காட்டும் வழிகள்" என்ற நூலினைப் பயிலரங்கின் தொடக்க விழாவில் நிறுவன இயக்குநர் வெளியிடச் சிறப்பு விருந்தினரும் நூலாசிரியரும் பெற்றுக்கொண்டனர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் த. சரவணனும் இணை ஒருங்கிணைப்பாளராகத் தரவு உள்ளீட்டாளர் திரு. தி.ஞா. அருள்ஒளியும் செயல்பட்டனர்.

---

### பயிலரங்கம் 12

# செம்மொழித் தரவக மதிப்பீட்டாய்வுப் பயிலரங்கம் - 2




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நாற்பத்தொரு தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கான செம்மொழித் தமிழ்த் தரவகம் உருவாக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. மொழித் தொழில்நுட்பப் புலம் சார்ந்து நாற்பத்தொரு நூல்களில் இருபது நூல்களுக்கு ஏற்கெனவே, உ.வே.சா. செம்மொழித் தமிழ்த் தரவகத்தினை உருவாக்கி இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து மீதமுள்ள இருபத்தொரு நூல்களுக்கும் துறையில் உருவாக்கப்பெற்ற சொற்பிரிப்புக் கருவியின் துணைகொண்டு சந்தி பிரித்த பாடம், சொற்பிரித்த பாடம் ஆகியன பிரிக்கப்பெற்றன. இவ்விருபத்தொரு நூல்களையும் இணையத்திலுள்ள தரவகத்தில் சேர்ப்பதற்குமுன் பிரிக்கப்பெற்ற பகுதிகளை வல்லுநர் குழுவால் மதிப்பீடு செய்வதற்காக மொழிகள் பள்ளி மற்றும் மொழிக்

கல்வியியல் புலம் & மொழித் தொழில்நுட்பப் புலத்தின் சார்பில் 'செம்மொழித் தரவக மதிப்பீட்டாய்வுப் பயிலரங்கம் - 2' செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 26.07.2023 முதல் 30.07.2023 வரை நடைபெற்றது.

இப்பயிலரங்கில் புறநிலை வல்லுநர்களாக முனைவர் வ. தனலட்சுமி (இணைப் பேராசிரியர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம்), முனைவர் ச.பொ. சீனிவாசன் (இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகக் கல்லூரி, பாளையம், திருவனந்தபுரம்), முனைவர் கோ. பழனிராஜன் (உதவிப் பேராசிரியர், மொழியியல் துறை, கேரள மத்தியப் பல்கலைக்கழகம், காசர்கோடு) ஆகியோரும் துறைசார் வல்லுநர்களாக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பயிலரங்கம் 13

# தமிழ்ச் செவ்விலக்கியமும் அகராதியியலும்






தொல்காப்பியத்தில் அகராதியியற் கூறுகள் இடம்பெற்றுள்ளன. பிற்காலத்தில் தோன்றிய நிகண்டுகளுக்குத் தொல்காப்பிய உரியியல் களம் அமைத்துத்தந்தது. தொல்காப்பியத்திற்குப் பின்தோன்றிய சில நிகண்டுகளின் குறிப்புகள், இறையனார் களவியல் உரை போன்றவை கூறும் செய்திகளைக் கொண்டு அகராதிக் கூறுகள் பற்றி அறியமுடிகின்றன. தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கு இணைச்சொற் களஞ்சியம், வரலாற்றுமுறை அகராதி, காலமுறை அகராதி, சமகால அகராதி, கிளைமொழி அகராதி, மொழியியல் அகராதி, பலபொருள் ஒரு சொல் அகராதி, பலசொல்/ இணைப்பொருள் அகராதி, செய்யுளியல் வகைச்சொல் அகராதி போன்ற அகராதிகள் உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகின்றன. செவ்விலக்கியச் சொற்களைத் தற்காலச் சொற்களுடன் ஒப்புநோக்கியும் அகராதி உருவாக்கலாம். அகராதிக் களங்கள் குறித்த சிந்தனையை எடுத்துரைக்கும் நோக்கில் 'தமிழ்ச் செவ்விலக்கியமும் அகராதியியலும்' என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 01.08.2023 முதல் 07.08.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபது ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னை, மொழி அறக்கட்டளையின் இயக்குநர் பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரை ஆற்றினார். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சு. ஏழுமலையும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்டும் செயல்பட்டனர்.



# தமிழ் மருத்துவர்களுக்கான சுவடிப் பயிற்சி






தொல்தமிழரின் மரபார்ந்த செல்வங்களில் ஒன்றான தமிழ் மருத்துவம் சார்ந்த அறிவு அனைத்தும் பனையோலைச் சுவடிகளில் பல்வேறு நூல்களாக உள்ளன. இன்றளவிலும் பல்லாயிரக்கணக்கான சித்த மருத்துவச் சுவடிகள் நூலாக்கம் செய்யப்படாமலும் இற்றை நாள் சித்த மருத்துவர்கள் இந்த அறிவுச் செல்வத்தைச் சுவடி வடிவில் படிக்க இயலாமலும் இன்னலுக்குள்ளாகி வருவதைப் போக்கும் வகையில் 'தமிழ் மருத்துவர்களுக்கான சுவடிப் பயிற்சி' என்னும் பத்து நாள் பயிலரங்கம் 22.08.2023 முதல் 31.08.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. முப்பத்துமூன்று சித்த மருத்துவர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரையும் பயிற்சியும் வழங்கினர். பயிலரங்கில் கலந்துகொண்ட அனைத்துச் சித்த மருத்துவர்களுக்கும் 25.08.2023 அன்று திருவான்மியூரில் உள்ள உ.வே. சாமிநாதையர் சுவடி நூலகத்தில் களப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நூலகம் உருவான வரலாறு பற்றியும் உ.வே.சா. அவர்களின் சுவடிகள் சேகரிப்பு, பதிப்புகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சியில் கலந்துகொண்டோர் ஆர்வமுடன் அனைத்துச் சுவடிகளையும் பிரித்துப் படிக்கவும் சுவடிகளைத் தூய்மைப்படுத்துதல், காத்தல் குறித்த நேரடிச் செய்முறைப் பயிற்சியையும் இதில் பெற்றனர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னை, அரும்பாக்கம் சித்த மருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளர் மருத்துவர் செ. சங்கர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் மேனாள் இணை இயக்குநர் பேராசிரியர் மருத்துவர் ஜி. கணபதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரை ஆற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் த. சரவணனும் இணை ஒருங்கிணைப்பாளராகத் தரவு உள்ளீட்டாளர் திரு. தி.ஞா. அருள்ஒளியும் செயல்பட்டனர்.



## முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையின்கீழ் முனைவர் பட்ட ஆய்வு (2021 - 2023) மேற்கொள்பவர்களின் ஆய்வுப் பணிகளை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 02.11.2023 அன்று நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர் ப. மருதநாயகம் வல்லுநராகக் கலந்துகொண்டு ஆய்வுப் பணிகளை மதிப்பீடு செய்தார். நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரி இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

பயிலரங்கம் 15

# செம்மொழித் தரவக மதிப்பீட்டாய்வுப் பயிலரங்கம் - 3





செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நாற்பத்தொரு தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கான செம்மொழித் தமிழ்த் தரவகம் உருவாக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. மொழித் தொழில்நுட்பப் புலம் சார்ந்து நாற்பத்தொரு நூல்களில் இருபது நூல்களுக்கு ஏற்கெனவே, உ.வே.சா. செம்மொழித் தமிழ்த் தரவகத்தினை உருவாக்கி இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து மீதமுள்ள இருபத்தொரு நூல்களுக்கும் துறையில் உருவாக்கப்பெற்ற சொற்பிரிப்புக் கருவியின் துணைகொண்டு சந்தி பிரித்த பாடம், சொற்பிரித்த பாடம் ஆகியன பிரிக்கப்பெற்றன. இவ்விருபத்தொரு நூல்களையும் இணையத்திலுள்ள தரவகத்தில் சேர்ப்பதற்குமுன் பிரிக்கப்பெற்ற பகுதிகளை வல்லுநர் குழுவால் மதிப்பீடு செய்வதற்காக மொழிகள் பள்ளி மற்றும் மொழிக் கல்வியியல் புலம் & மொழித் தொழில்நுட்பப் புலத்தின் சார்பில் ‘செம்மொழித் தரவக மதிப்பீட்டாய்வுப் பயிலரங்கம் - 3’ செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 28.08.2023 முதல் 02.09.2023 வரை நடைபெற்றது.

இப்பயிலரங்கில் புறநிலை வல்லுநர்களாக முனைவர் வ. தனலட்சுமி (இணைப் பேராசிரியர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம்), முனைவர் ச.பொ. சீனிவாசன் (இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகக் கல்லூரி, பாளையம், திருவனந்தபுரம்), முனைவர் கோ. பழனிராஜன் (உதவிப் பேராசிரியர், மொழியியல் துறை, கேரள மத்தியப் பல்கலைக்கழகம், காசர்கோடு) ஆகியோரும் துறைசார் வல்லுநர்களாக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பயிலரங்கம் 16

# தமிழர் மரபில் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை



தமிழர்கள் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை ஆகியவற்றில் சிறந்து விளங்கினர் என்பதைத் தமிழ்ச் செவ்விலக்கியங்கள்வழி அறியலாம். கல்விக்கும் கலை வளர்ச்சிக்கும் கோவில்கள் பெருந்தொண்டு புரிந்துள்ளன. தமிழ்நாட்டுக் கட்டடக் கலையின் மாண்பினைக் கோவில்கள் உணர்த்துகின்றன. கட்டடக் கலைக்கு அடுத்ததாகச் சிற்பக் கலை சிறப்பிடம் பெறுகின்றது. சிற்பியரின் கற்பனைச் செழுமைக்கேற்பச் சுவர், தூண், விதானம் போன்றவற்றிலும் கருங்கல், சலவைக்கல், உலோகம், தந்தம், மண், மரம்,




நவபாஷாணம், சுடுசர்க்கரையோகம், பிற ஊடுபொருள்கள் போன்றவற்றிலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. இயற்கையில் காணலாகும் அழகிய காட்சிகள் பழங்கால மனிதனின் உள்ளத்தில் ஏற்படுத்திய தூண்டுதல்கள் அழகுணர்ச்சியாக மலர்ந்து சுதைச்சுவர், கட்டட விதானம், பலகை, மண்பாத்திரம், திரைச்சீலை போன்றவற்றில் சித்திர உருவங்கள் அமையப்பெற்றன. பண்டைத் தமிழரின் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை ஆகியவற்றின் தனித்தன்மை, நுணுக்கம், பொறியியல் திறன், வளர்ச்சி நிலை ஆகியவற்றை எடுத்துரைக்கும் நோக்கில் 'தமிழர் மரபில் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை' என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 14.09.2023 முதல் 21.09.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தொன்பது ஆய்வு மாணவர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டடக் கலைத் துறையின் மேனாள் தலைவரும் பேராசிரியருமான கோ. தெய்வநாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், வாஸ்து வேத அறக்கட்டளை நிருவாக அறங்காவலர் முனைவர் க. தட்சிணாமூர்த்தி ஸ்தபதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கூ.மு. புவனேஸ்வரி ஒருங்கிணைப்பாளராகவும் ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரி இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

---

**பயிலரங்கம் 17**

# பனாரஸ் இந்து பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களுக்குச் செம்மொழித் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்துதல்




பனாரஸ் இந்து பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களுக்குச் செம்மொழித் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் பத்து நாள் பயிலரங்கம் 07.10.2023 முதல் 16.10.2023 வரை செம்மொழித் தமிழாய்வு



மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இப்பயிலரங்கில் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இருபத்தேழு ஆய்வு மாணவர்கள் பங்கேற்றனர். பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் செம்மொழித் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னைப் பல்கலைக்கழக இந்தித் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் பெ. சரஸ்வதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், பனாரஸ் இந்து பல்கலைக்கழக இந்திய மொழிகள் துறையின் தமிழ் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் த. ஜெகதீசன், முனைவர் சு. விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரி, இணை ஒருங்கிணைப்பாளர்களாக இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள் முனைவர் வே. அழகுமுத்து, முனைவர் மா. சுசிலா ஆகியோர் செயல்பட்டனர்.

---

பயிலரங்கம் 18

# அண்டை மொழிகளை அறிந்துகொள்ளுதல்






செம்மொழிகளுள் மிகவும் பழமையானதும் உயர்தனிச் செம்மொழியாகவும் திகழ்வது தமிழ் மொழியாகும். தமிழின் அண்டை மொழிகளாகத் தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, படுகு, கொரகா மொழி, கொடவ மொழி, எரவள்ளா மொழி, இருளர் மொழி, காடர் மொழி, காணிக்காரர் மொழி, காட்டுநாயக்கர் மொழி, குறும்பர் மொழி, பணியர் மொழி, சோளநாயக்கர் மொழி, தோடர் மொழி, ஊராளி மொழி, நரிக்குறவர் மொழி, முதுவர் மொழி, சௌராஷ்டிரம் ஆகிய மொழிகள் இருந்து வருகின்றன. இம்மொழிகளுக்குரிய இலக்கிய உறவுகள், இலக்கண மரபுகள், பண்பாட்டுக் கூறுகள் உள்ளிட்ட பொதுமைக்கூறுகளை எடுத்தியம்பும் நோக்கிலும், பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகவும் ‘அண்டை மொழிகளை அறிந்துகொள்ளுதல்’ என்னும் பத்து நாள் பயிலரங்கம் 15.11.2023 முதல் 24.11.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வு மாணவர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். இப்பயிலரங்கில் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களின் கலைநிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பெற்றன.







பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னைப் பல்கலைக்கழகக் கன்னடத் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் மா. ரங்கசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தின் மேனாள் இயக்குநர் பேராசிரியர் கோ. சீனிவாசவர்மா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் மு. செல்வதுரை, இணை ஒருங்கிணைப்பாளர்களாக இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள் முனைவர் வ. மாரியப்பன், முனைவர் வே. அழகுமுத்து ஆகியோர் செயல்பட்டனர்.

---

## பயிலரங்கம் 19

# தமிழக நாட்டுப்புற மரபுகள்



வாய்மொழி இலக்கியங்கள் உலகில் தோன்றின என்பதையும், எழுத்து வடிவம் வழக்கிற்கு வருவதற்குமுன் எல்லா இலக்கியங்களும் வாய்மொழி இலக்கியங்களாக இருந்தன என்பதையும் வரலாற்றின்வழி அறியலாம். வாய்மொழி இலக்கியத்திலும் எழுத்திலக்கியத்திலும் கற்பனை, உவமை, உருவகம், எதுகை, மோனை, அந்தாதி போன்ற பொதுப் பண்புகள் நிறைந்துள்ளன. வாய்மொழி இலக்கியக் கூறான உள்ளடக்கம், வடிவக்கூறு, அமைப்பு முறை போன்றவை எழுத்திலக்கியத்திலும் ஊடுருவியுள்ளதைக் காணலாம். உலக மொழிகளுள் பல பேச்சு வழக்கற்று எழுத்தளவில் மட்டுமே உள்ளன. இந்நிலையில் தமிழ் மொழி பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இரு நிலையிலும் நிலைத்து, இன்றளவும் வாழும் செம்மொழியாகத் திகழ்கின்றது. தமிழக நாட்டுப்புற மரபுகளை மீட்டுருவாக்கம் செய்யும் நோக்கிலும், பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகவும் 'தமிழக நாட்டுப்புற மரபுகள்' என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 30.11.2023 முதல் 03.12.2023 வரையிலும், 19.12.2023 முதல் 21.12.2023 வரையிலும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வு மாணவர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறுபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். இப்பயிலரங்கில் தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பெற்றன.



பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ், இந்திய மொழிகள்










மற்றும் கிராமியக் கலைகள் புலப் பேராசிரியர் ஒ. முத்தையா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையின் மேனாள் பேராசிரியர் ஆறு. இராமநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் அ. ஆரோக்கியதாசு, இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ப. கண்ணதாசன் ஆகியோர் செயல்பட்டனர்.

---

பயிலரங்கம் 20

## ஈழத்துத் தமிழறிஞர்களின் செவ்வியல் தமிழ்ப் பணிகள்






ஈழத்துத் தமிழறிஞர்கள் பலர் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த தமிழ்ப் பணிகளை ஆற்றியுள்ளனர். கல்வித் தேர்ச்சியாலும், ஆழமான புலமையாலும் ஈழத்து அறிஞர்களின் வழியாகத் தமிழ் நூல்கள் பல அயல்நாடுகளுக்கும் சென்று பரவின. கூழங்கைத் தம்பிரான், சைமன் காசிச் செட்டி, ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, வி. கனகசபைப் பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, சி. கணேசையர், சுவாமி விபுலானந்தர், ந.சி. கந்தையா பிள்ளை முதலான பல ஈழத்து அறிஞர்கள் தமிழ்ப் பணியாற்றியுள்ளனர். இவ்அறிஞர்களின் நிலைபெற்ற தமிழ்த் தொண்டு, பதிப்புச் செயல்பாடு குறித்த விழுமியங்களை எடுத்துரைக்கும் நோக்கில் 'ஈழத்துத் தமிழறிஞர்களின் செவ்வியல் தமிழ்ப் பணிகள்' என்னும் பத்து நாள் பயிலரங்கம் 13.12.2023 முதல் 22.12.2023 வரை செம்மொழித்




தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. முப்பத்தாறு ஆய்வு மாணவர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் பல்வேறு ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். புலவர் பொ. வேல்சாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ம. தமிழ்வாணன், இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம் ஆகியோர் செயல்பட்டனர்.

---




# காசித் தமிழ்ச் சங்கமத்தில் நிறுவன நூல்கள் வெளியீடு


செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ‘திருப்புடைமருதூர் ஓவியங்கள்’, ‘மணிமேகலை சமஸ்கிருத மொழிபெயர்ப்பு’, ‘Presence of Ancient Tamil Words in Other Indian Languages’ ஆகிய நூல்களை மேதகு தமிழக ஆளுநர் **திரு. ஆர்.என். ரவி** அவர்கள் 24.12.2023 அன்று வாரணாசியில் நடைபெற்ற காசித் தமிழ்ச் சங்கமம் நிகழ்வில் வெளியிட்டுச் சிறப்பித்தார்.

# கருத்தரங்குகள்

## கருத்தரங்கம் 1

### தொல்காப்பியம் மற்றும் செம்மொழித் தமிழ், வரலாற்றுடனான அதன் தொடர்பும்







தனித்தன்மை, தாய்மைத் தன்மை, உடன்கால இலக்கியங்களின் மீதான செல்வாக்கு, பிற மொழி இலக்கியங்களை உருவாக்குதல் எனும் செவ்விலக்கியக் கூறுகளைக் கொண்டிருக்கும் தொல்காப்பியத்தின் சிறப்பையும் வளத்தையும் உலகெங்கும் கொண்டு சேர்க்கும் நோக்கில் 'தொல்காப்பியம் மற்றும் செம்மொழித் தமிழ், வரலாற்றுடனான அதன் தொடர்பும்' என்னும் இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துடன் அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகமும் இணைந்து 25.04.2023 முதல் 26.04.2023 வரை இணையவழியில் நடைபெற்றது. நூற்றிற்கும் மேற்பட்ட ஆய்வாளர்கள் பங்கேற்ற இக்கருத்தரங்கின் எட்டு அமர்வுகளிலும் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

## கருத்தரங்கம் 2

### இந்திய மொழிகளில் இராமாயணம் - ஒப்பாய்வு

இறையியல், மானுட வாழ்வியல் என இரு நிலைகளில் உயர்ந்த கோட்பாடுகளோடு விளங்கும் இந்திய இதிகாசமான இராமாயணம் பல்வேறு மொழிகளில் இயற்றப்பட்டுள்ளது. பல மொழிகளில் இயற்றப்பட்டுள்ள இராமாயணம் கதை, கதைமாந்தர், இலக்கிய வளம் ஆகியவற்றால் ஒன்றுபட்டும், பண்பாடு, மொழியமைப்பு ஆகியவற்றால் மாறுபட்டும் காணப்படுகின்றன. இந்திய மொழிகள் பலவாக இருப்பினும் அவற்றினிடையே இழையோடும் மொழிக்கூறுகள், இலக்கிய வளங்கள், பண்பாடு, கலைகள் ஆகியவற்றின் பரிமாணத்தினை உணர்த்தும் வகையிலும், பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு







பகுதியாகவும் ‘இந்திய மொழிகளில் இராமாயணம் - ஒப்பாய்வு’ என்னும் இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம் *20.11.2023* முதல் *21.11.2023* வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இக்கருத்தரங்கின் ஏழு அமர்வுகளிலும் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். இக்கருத்தரங்கில் இராமாயணத் (சுந்தர காண்டம்) தோற்பாவைக் கூத்து நிகழ்த்தப்பெற்றது.

கருத்தரங்கின் தொடக்க விழாவில் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். கலைமகள் இதழின் ஆசிரியர் கலைமாமணி கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர்களாக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோர் செயல்பட்டனர்.

## கருத்தரங்கம் 3

# பன்முக நோக்கில் செம்மொழித் தமிழ்

செம்மொழித் தமிழின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையிலும், பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகவும் ‘பன்முக நோக்கில் செம்மொழித் தமிழ்’ என்னும் இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம் *22.11.2023* முதல் *23.11.2023* வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. நாற்பது ஆய்வாளர்கள் பங்கேற்ற இக்கருத்தரங்கின் ஏழு அமர்வுகளிலும் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

கருத்தரங்கின் தொடக்க விழாவில் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். பாரீஸ் பல்கலைக்கழக வரலாற்றியல் மற்றும் செவ்வியல் மொழித்துறை உயராய்வு மையப் பேராசிரியர் அப்பாசாமி முருகையன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரை ஆற்றினார். இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. வெங்கடேசன், இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சுப. வேல்முருகன் ஆகியோர் செயல்பட்டனர்.







# புத்தொளிப் பயிற்சி வகுப்புகள்

## 1. தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் தமிழின் செம்மொழிப் பண்புகள்







சிந்துவெளி ஆய்வும், அரிக்கமேடு, பொருந்தல், ஆதிச்சநல்லூர், கீழடி முதலான இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகளும் தமிழ் வரலாற்றின் காலத்தைப் பின்னோக்கிக் கொண்டுசெல்வதற்குக் காரணமாக அமைந்துள்ளன. கீழடி அகழாய்வில் கிடைத்த சான்றுகளின் மூலமாகத் தமிழின் தொன்மை தொடர்பாக இதுவரை நிலவிவந்த கருதுகோள்களுக்கு உறுதியான தரவுகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டு நகரமயமாதல் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது என்பதும் கீழடி அகழாய்வால் உறுதியாகியுள்ளது. தமிழி (தமிழ் - பிராமி) எழுத்து வடிவத்தின் காலத்தை இன்னும் பின்னோக்கி எடுத்துச்செல்லத்தக்க சான்றுகள் கிடைத்துள்ளன.

தொல்லியல் ஆய்வு முடிவுகளின் வழியாகப் பெறப்பட்டுள்ள தமிழின் செம்மொழிப் பண்புகளை பேராசிரியர்களுக்குப் பயிற்றுவித்துத் தொல்லியல் துறை தொடர்பான ஆய்வுகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கில் ‘தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் தமிழின் செம்மொழிப் பண்புகள்’ என்னும் புத்தொளிப் பயிற்சி வகுப்பு 06.10.2023 முதல் 19.10.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. முப்பது பேராசிரியர்கள் பங்கேற்ற இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பின் ஐம்பது அமர்வுகளிலும் தொல்லியலின் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

புத்தொளிப் பயிற்சி வகுப்பின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னை, இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையின் தொல்லியல் கண்காணிப்பாளர் திரு. கி. அமர்நாத் ராமகிருஷ்ணா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இப்பயிற்சி வகுப்பின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. வெங்கடேசன், இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் வே. அழகுமுத்து ஆகியோர் செயல்பட்டனர்.

## 2. ஒப்புநோக்கில் தமிழ்ச் செவ்விலக்கியங்கள்

உலக மொழிகளில் இன்றுவரை நமக்குக் கிடைத்துள்ள இலக்கண, மொழியியல் நூல்களில் காலத்தால் முதன்மையானதும் பொருண்மையால் முழுமையானதும் தொல்காப்பியம் ஆகும். கிரேக்க, ரோமானிய, எபிரேய

இனங்கள் படைத்த தொன்மையான இலக்கண நூல்களெல்லாம் காலத்தால் தொல்காப்பியத்திற்குப் பிந்தியவை என்பதை அண்மைக்கால ஒப்புநோக்கு ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன. ஒப்புநோக்கில் செம்மொழித் தமிழின் சிறப்புகளை எடுத்தியம்பும் நோக்கிலும், பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகவும் 'ஒப்புநோக்கில் தமிழ்ச் செவ்விலக்கியங்கள்' என்னும் புத்தொளிப் பயிற்சி வகுப்பு 29.11.2023 முதல் 12.12.2023 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. முப்பது பேராசிரியர்கள் பங்கேற்ற இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பின் ஐம்பது அமர்வுகளிலும் ஒப்புநோக்கில் தமிழ்ச் செவ்விலக்கியங்களின் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

புத்தொளிப் பயிற்சி வகுப்பின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். கல்வெட்டியல் அறிஞர் திரு. எஸ். இராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன மேனாள் ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிற்சி வகுப்பின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. வெங்கடேசன், இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சி. இராமச்சந்திரன் ஆகியோர் செயல்பட்டனர்.

## பன்னிரண்டாவது நிதிக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பன்னிரண்டாவது நிதிக் குழுக் கூட்டம் நிறுவனத் துணைத்தலைவர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில் 25.08.2023 அன்று நிறுவனக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதிக் குழு உறுப்பினர்களான பேராசிரியர் இராம. குருநாதன் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை), துணைச் செயலாளர் (மொழிகள் பிரிவு, கல்வி அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி), பேராசிரியர் ந. பஞ்சநதம் (மேனாள் துணைவேந்தர், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை), முனைவர் ந. அருள் (இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்நாடு அரசு, சென்னை), பேராசிரியர் இரா. சந்திரசேகரன் (இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை) ஆகியோர் கலந்துகொண்டனர். இணைச் செயலாளர் மற்றும் நிதி ஆலோசகர் (கல்வி அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி), பேராசிரியர் ஈ. கனகராஜ் (சமூகப் பணித் துறை, சமூக அறிவியல் பள்ளி, மிசோரம் பல்கலைக்கழகம், மிசோரம்) ஆகிய இவ்விரு நிதிக் குழுக் கூட்ட உறுப்பினர்களும் இணையவழியாகக் கலந்துகொண்டனர். நிதிக் குழுக் கூட்டத்தின் உறுப்பினர் செயலரான நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்கள் இக்கூட்டத்தை ஒருங்கிணைத்து நடத்தினார்.

## பத்தாவது ஆட்சிக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பத்தாவது ஆட்சிக் குழுக் கூட்டம், நிறுவனத்தின் தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டு 30.11.2023 அன்று சுற்றோட்ட முறையில் நடைபெற்றது. பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி (துணைத்தலைவர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை) அவர்களுக்கும், ஆட்சிக் குழு உறுப்பினர்களான பேராசிரியர் இராம. குருநாதன் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை), பேராசிரியர் த. இராஜாராம் (மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், எஸ்.வி.என். கல்லூரி, மதுரை), பேராசிரியர் ந. பஞ்சநதம் (மேனாள் துணைவேந்தர், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை), பேராசிரியர் ஈ. கனகராஜ் (சமூகப் பணித் துறை, சமூக அறிவியல் பள்ளி, மிசோரம் பல்கலைக்கழகம், மிசோரம்), முனைவர் சோ. தர்மசேனன் (சென்னை), செயலாளர் (தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை), இயக்குநர் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை), இயக்குநர் (தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை), இயக்குநர் (இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு), இணைச் செயலாளர் (மொழிகள் பிரிவு, உயர்கல்வித் துறை, கல்வி அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி), நிதி ஆலோசகர் (உயர்கல்வித் துறை, கல்வி அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி) ஆகியோருக்கும், இக்கூட்டத்தின் உறுப்பினர் செயலர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் (இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை) அவர்களுக்கும் ஆட்சிக் குழுக் கூட்ட நிரல்கள் சுற்றுக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டன.

ஆய்வுக் கட்டுரை

# இலக்கண நூல்கள்

**இரா. முத்துக்குமாரசாமி**

ஒரு மொழியின் ஆக்கத்திற்கு அடிப்படை இலக்கணமே. இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பப் பெறுகிறது. இலக்கியமின்றேல் இலக்கணமில்லை. எனினும் இலக்கணம்தான் மொழியின் வளர்ச்சிக்கு உதவுகிறதென்பதில் யாதோரையமுமில்லை. முன் எழுந்த இலக்கண நூல்களிற் கூறப்பட்டுள்ள விதிகளின் அடியொற்றியே பின்வரும் இலக்கியங்கள் எழுகின்றன. எனவே, இலக்கியமும் இலக்கணமும் மொழியின் இரு கண்களென இயம்பலாம்.

தமிழ் தொன்மையான மொழி. இலக்கண இலக்கிய வளமுடைய மொழி. ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றிய இலக்கிய இலக்கண நூல்கள் இன்றும் நம்மிடையே உலவுகின்றன.

இலக்கணத்தைத் தமிழ் நூலார் ஐவகையாகப் பிரித்துள்ளனர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பவையே அவை. எழுத்திலக்கணமென்பது எழுத்தின் வகை, பிறப்பு, வரிவடிவு, புணர்ச்சிமுறை முதலியவற்றை விளக்குவது. சொற்களின் பல்வேறு பகுதிகளும் அவை பயிலுமுறையும் சொல்லிலக்கணத்தில் விளக்கப்பெறும். பொருள் என்பது தமிழனின் அகவாழ்க்கையை விளக்கும் அகப்பொருளையும் புறவாழ்க்கையை விளக்கும் புறப்பொருளையும் கொண்டது. செய்யுளுறுப்புக்களை விளக்கிப் பாவியற்றும் யாப்பு முறையை இயம்புவதே யாப்பிலக்கணம். செய்யுள்களில் இடம்பெறும் உவமை உருவகம் முதலிய அணிநயங்களை விளக்குவது அணியிலக்கணம்.

தொல்காப்பியர்காலத்தில் இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என மூன்று வகையாகவே பிரிக்கப்பட்டிருந்தது. பிற்காலத்தில் தோன்றிய யாப்பு, அணி என்ற பிரிவுகள் தொல்காப்பியத்தில் பொருள் அதிகாரத்தில் முறையே செய்யுளியலிலும் உவமையியலிலும் அடங்கியுள்ளன. அவற்றில் கூறப்பட்ட கருத்துகளே பின்னர் தனித்தனிப் பிரிவுகளாக உருவாயின. இறையனாரகப் பொருள் உரை எழுந்த காலத்தில் மேற்கூறப்பட்ட மூன்றொடு யாப்பும் சேர்க்கப்பட்டுத் தமிழ் இலக்கணம் நான்கு பிரிவுகளாக வளர்ச்சியடைந்தது. ஐந்தாவதான அணியிலக்கணம் தண்டியாசிரியர் தண்டியலங்காரமென்ற அணியிலக்கண நூலை எழுதிய பின்பே தனிப் பிரிவாக வளர்ச்சியடைந்தது.

தமிழ் இலக்கண நூல்கள் அனைத்துமே இவ்வைந்து உறுப்புக்களையும் விளக்குகின்றன என்று கூறுதல் இயலாது. இவற்றில் இரண்டு கூறுவனவும் மூன்று கூறுவனவும் தனித்தனியே ஓரிலக்கணத்தைக் கூறுவனவுமாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. தனித்தனியாக இலக்கணம் கூறவேண்டிய நிலையெழுந்தபோது பொருள் இலக்கணம் இருவகையாகப் பிரிக்கப் பெற்றுத் தமிழரின் அகவொழுக்கத்தை விரிக்கும் அகப்பொருள் இலக்கணமாகவும் புறவொழுக்கத்தை விளக்கும் புறப்பொருள் இலக்கணமாகவும் மலர்ந்தது.

முதல் தமிழ் இலக்கண நூலைச் செய்தவர் அகத்தியர் என்பது தமிழ் வழக்கு. இவர் வடபுலத்திலிருந்து தென்புலம் போந்த தமிழ் முனி என்றும் கூறப்படுகிறது. இவர் இயற்றியதாகக் கூறப்படும் இலக்கணம் ‘அகத்தியம்’ என்ற பெயரிலேயே உலவியதாகத் தெரிகிறது. இது முதலிரு சங்கங்களுக்கும் இலக்கணமாக விளங்கிற்றென்று சொல்லப்படுகிறது. இந்நூல் கடல் கோளால் மறைவுற்றிருக்கலாமெனத் தெரிகிறது. இப்பொழுது பேரகத்தியத் திரட்டு, சிற்றகத்தியத் திரட்டு என்று வழங்கப்பெறும் இலக்கண நூல்கள் முதல் அகத்தியர் இயற்றியதென ஒப்புக்கொள்வார் குறைவு. அப்பெயரையுடைய பிற்காலப் புலவர் ஒருவர் இந்நூல்களை இயற்றியிருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

அகத்தியனாரின் மாணாக்கர் பன்னிருவர் இருந்தனரெனப் புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரம் குறிப்பிடுகிறது. அவர்களுள் ஒருவரே ஒல்காப் புகழ் பெற்ற ‘தொல்காப்பியம்’ என்னும் நூலை இயற்றிய தொல்காப்பியர். நமக்குக் கிடைக்கும் தமிழ் இலக்கண நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியமே. தொல்காப்பியரின் காலம் இதுவெனத் துணிந்து கூற முடியாதாயினும், பெரும்பாலான தமிழ் அறிஞர் ஒத்துக்கொண்ட காலம், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு என்பதே. ‘அதங்கோட்டாசான்’ என்று தொல்காப்பியர் குறிப்பிடப்பெறுவதால், அவர் திருவாங்கூர் என இன்று வழங்கும் திருவிதாங்கோட்டையைச் சார்ந்தவர் என்று கூறுவர்.

தொல்காப்பியர் நூலில் ஆங்காங்கு 'என்ப' 'என்மனார் புலவர்' என்று குறிப்பிடுவதால், அவருக்கு முன் பல தமிழ்ப்புலவர்கள் வாழ்ந்துளரென்பதும், பல தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டுமென்பதும் துணிபு.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையுடையது. எழுத்துகளின் வகை, அவற்றின் பெயர் முதலாக, சொற்களின் புணர்ச்சி வரை எழுத்திலக்கணத்தை ஒன்பது இயல்களில் விளக்கியுள்ளார் ஆசிரியர். சொற்கள் தொடர்களாக அமையும்போது அவற்றிடை இலங்க வேண்டிய பொருத்தங்களையும் நால்வகைச் சொற்களான பெயர், வினை, இடை, உரி என்பவற்றையும் சொல்லதிகாரம் விளக்குகின்றது. பண்டைத் தமிழர் வாழ்வின் சிறப்பெனப் போற்றப்படும் அகப் புற வொழுக்கங்களின் இலக்கணங்களையும் செய்யுள் நலத்திற்கு இன்றியமையாத சுவை, உவமை, யாப்பு போன்றவற்றின் இலக்கணங்களையும் பொருளதிகாரம் தெளிவுபடுத்துகின்றது.

மூன்று அதிகாரங்களுக்குமாகச் சேர்த்து மொத்தம் ஆயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட நூற்பாக்கள் உள்ளன. தொல்காப்பியத்தின் சிறப்பு அதற்கு உரையெழுதிய உரையாசிரியர்களால் பெருமளவுக்கு ஓங்கியது எனலாம். இவ்விழுமிய நூலுக்கு உரை கண்டவர்கள் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார் என அறுவர். பிற்காலத்தில் எழுந்த உரைகாரர்களுள் குறிப்பிடத்தக்கவர் சிவஞான முனிவரும் சோழவந்தான் அரசஞ் சண்முகனாருமாவர்.

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் காலத்தால் முந்தியவர் இளம்பூரணர். அத்துடன் தொல்காப்பியம் முழுவதற்குமே உரை கண்டவர் இவர். இவர்தம் உரையின் சிறப்பினை உணர்ந்த பிற்கால உரையாசிரியர்கள் இவரைப் பெயர் கூறிச் சுட்டாது உரையாசிரியர் என்றே குறிப்பிட்டு வந்துள்ளனர். இது அவர்தம் புகழையும் உரையின் சிறப்பினையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. மிகத் தெளிவாக ஆற்றொழுக்கு போன்ற நடையில் உரை எழுதியுள்ள இளம்பூரணர் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் இவர் உரையெழுதியிருப்பினும் எழுத்ததிகாரத்திற்கு இவர் எழுதியுள்ள உரையே புலவர்களால் பெரிதும் போற்றப்படுகின்றது.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேனாவரையர் தொல்காப்பியம் சொல்லதிகாரத்துக்கு எழுதியுள்ள உரை கற்றோர் அனைவராலுமே போற்றப்படுகின்றது. சேனாவரையரின் உரை சற்றுக் கடினமாயிருப்பினும் அது அவர்தம் புலமையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. உரையாசிரியரின் கருத்துகளுக்குப் பல இடங்களில் இவர் மாறுபட்டிருப்பினும் முன்னோர் மொழி பொருளை இவர் பொன்னே போல் போற்றியிருக்கிறார் என்பது தெளிவு.

அவருக்குப் பின் தோன்றிய பேராசிரியர் பொருளதிகாரம் முழுவதுக்குமே உரையெழுதியுள்ளாரெனத் தெரிகிறது. ஆனால் தற்பொழுது கிடைத்திருப்பது மெய்ப்பாட்டியல், உவம இயல், செய்யுளியல், மரபியல் என்ற நான்கு இயல்களுக்கு எழுதப்பட்ட உரையே. எனினும், இப்பகுதிக்கு இவர் உரையைவிட வேறு சிறந்த உரை எழவில்லையெனலாம். பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இவர் வாழ்ந்தார் என்று கூறுவர்.

உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் முழுவதுக்குமே உரையெழுதியுள்ளார். இருப்பினும் பொருளதிகாரத்திலுள்ள மெய்ப்பாட்டியல், உவம இயல், மரபியல் ஆகிய மூன்றுக்கும் இவர் எழுதிய உரை பிற்காலத்தில் கிடைக்கவில்லை. இவர்தம் உரை இலக்கிய மேற்கோள் மிக்குடையது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர் வாழ்ந்திருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

சொல்லதிகாரத்திற்கு மட்டுமே தெய்வச்சிலையார் என்பார் உரையியற்றியிருக்கலாமெனத் தெரிகின்றது. 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்ததாகக் கருதப்படும் இவர்தம் உரையை விருத்தியுரையென்று குறிப்பிட்டுள்ளார். கல்லாடனார் என்பார் சொல்லதிகாரத்திற்கு எழுதியுள்ள உரை அண்மையில் நூல் வடிவில் வெளிவந்துள்ளது. இவர் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாமென்பர்.

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞான முனிவர் தொல்காப்பியப் பாயிரத்துக்கும் முதற் சூத்திரத்துக்கும் விருத்தியுரை யியற்றியுள்ளார். முன்னவர் உரைகளில் முரண்பட்ட இடங்களையெல்லாம் இவர் துணிந்து மறுத்துள்ளார்.

சோழவந்தான் அரசஞ் சண்முகனார் தொல்காப்பியப் பாயிரம், நூன் மரபு, மொழி மரபு ஆகிய மூன்று பகுதிகளுக்கும் உரையெழுதியுள்ளார். இவர்தம் உரை 'சண்முக விருத்தி' எனவும் அழைக்கப்பெறும். இவர்தம் பாயிர உரை மட்டுமே நூல் வடிவில் வெளிவந்துள்ளது. 1868இல் தோன்றிய சண்முகனார் 1915இல் மறைவுற்றார்.

தொல்காப்பிய நூலுக்குப் பல விளக்க நூல்களும் அதன் உரைகளின் பல பதிப்புகளும் வெளிவந்துள்ளன. அதன் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் வெளியிடப் பெற்றுள்ளன. தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த இலக்கண நூல்களை ஐந்திலக்கணமும் கூறும் நூல்கள், தனித்தனி இலக்கணம் கூறும் நூல்களென்று பிரிக்கலாம். தொல்காப்பியத்திற்கு முன் தோன்றி மறைந்த மா புராணம், பூத புராணம் போன்ற இலக்கண நூல்கள் ஐந்திலக்கணங்களும் கூறியனவா என்பது தெரியவில்லை. தொல்காப்பியத்திற்குப் பின்தோன்றிய ஐந்திலக்கண நூல்களுள் முதலில் குறிப்பிடத்தக்கது வீர சோழியமே.

பாண்டி நாட்டைச் சார்ந்த புத்தமித்திரனார் என்பார் இயற்றியதே வீரசோழியம். சோழ மன்னர்களுள் ஒருவரான வீரராசேந்திரனின் விருப்பத்திற்கிணங்க இந்நூல் எழுந்ததாகலின் இந்நூல் அவர்தம் பெயரைத்தழுவி வீரசோழியம் எனப் பெயர் பெற்றது. வீரராசேந்திரனின் ஆட்சிக் காலம் கி.பி.1063-1070 ஆகும். எனவே இந்நூலும் அக்காலத்தில்தான் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பது துணிபு.

இது எழுத்து, சொல்,பொருள், யாப்பு, அணி என ஐந்து அதிகாரங்களையுடையது. மொத்தம் 186 நூற்பாக்கள் இதன்கண் பயின்று வந்துள்ளன. தமிழிலக்கணத்தை எழுதப் புகுந்த இந்நூலாசிரியர் வடமொழி இலக்கணத்தையும் தழுவி இந்நூலை எழுதியுள்ளதால் இது பெருவழக்கற்றுப் போயிற்று எனலாம். பெருந்தேவனார் என்பார் இந்நூலுக்கு விரிவான உரையொன்று எழுதியுள்ளார். பல சிறப்புகளையுடைய இவ்வுரை மூலநூல் பரவாத காரணத்தால் தனக்குரிய புகழையும் அடையாது நிற்கின்றது. இவ்வுரையாசிரியர் மூலநூலாசிரியர் வாழ்ந்த காலத்திற்கு மிக அண்மையிலேயே வாழ்ந்திருக்கிறார்.

வீரசோழியத்திற்கு அடுத்ததாக ஐந்திலக்கணங்களையும் விரிக்க முற்பட்ட நூல் இலக்கண விளக்கமே. திருவாரூரினரான வைத்தியநாத தேசிகர் என்பார் இதை இயற்றினார். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் இவர்.

எழுத்து முதல் பொருளீறாக இந்நூல் ஐந்து அதிகாரங்களாலானது. மொத்தம் 941 நூற்பாக்களை உடையது. முன்னோர் மொழி பொருளன்றி அவர் சொல்லையும் பொன்னேபோல் போற்றுவமென்ற வகையில், தொல்காப்பியம், நன்னூல், யாப்பு, தண்டி போன்ற நூல்களிலுள்ள நூற்பாக்களைப் பலவிடங்களில் அவ்வாறே பெய்து வைத்துள்ளார். எனினும், தாம் மாறுபட்ட இடங்களிலெல்லாம் தம் கருத்தைப்பதிந்து வைக்க இவர் தவறவில்லை. இதற்கு உரிய உரையையும்

# புத்தகக் காட்சிகள்


### 1. சென்னைப் புத்தகக் காட்சி

நாற்பத்தாறாவது சென்னைப் புத்தகக் காட்சி 06.01.2023 முதல் 22.01.2023 வரை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இப்புத்தகக் காட்சியில் நிறுவன அரங்குகளை (எண் 526, 527) இயக்குநர், பேரா. இரா. சந்திரசேகரன் அவர்கள் திறந்துவைத்தார். புத்தகக் காட்சியில் நூல் விற்பனைப் பொறுப்பாளர்களாக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம், தரவு உள்ளீட்டாளர் திரு. சோ. சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




### 2. கோயம்புத்தூர் புத்தகத் திருவிழா

கோயம்புத்தூர் கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தில் 21.07.2023 முதல் 30.07.2023 வரை நடைபெற்ற கோயம்புத்தூர் புத்தகத் திருவிழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நூல் விற்பனை அரங்குகளை (எண் 204, 205) அமைத்தது. இப்புத்தகக் காட்சியில் நூல் விற்பனைப் பொறுப்பாளர்களாக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம், தரவு உள்ளீட்டாளர் திரு. சோ. சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



### 3. ஈரோடு புத்தகத் திருவிழா

ஈரோடு புத்தகத் திருவிழா 04.08.2023 முதல் 15.08.2023 வரை ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இத்திருவிழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அரங்குகளை (எண் 124, 125) இயக்குநர், பேரா. இரா. சந்திரசேகரன் அவர்கள் திறந்துவைத்தார். புத்தகக் காட்சியில் நூல் விற்பனைப் பொறுப்பாளர்களாக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம், தரவு உள்ளீட்டாளர் திரு. சோ. சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.







### 4. சென்னைப் பல்கலைக்கழகத்தில் புத்தகக் காட்சி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 23.01.2023 அன்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஒரு நாள் புத்தகக் காட்சியை அமைத்தது. இப்புத்தகக் காட்சியில் நூல் விற்பனைப் பொறுப்பாளர்களாக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம், தரவு உள்ளீட்டாளர் திரு. சோ. சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### 5. காசித் தமிழ்ச் சங்கமத்தில் புத்தகக் காட்சி

உத்தரப்பிரதேச மாநிலம், வாரணாசி நகரின் நமோ படித்துறையில் 17.12.2023 முதல் 30.12.2023 வரை காசித் தமிழ்ச் சங்கமம் நடைபெற்றது. இந்நிகழ்வின் ஒரு பகுதியாக நடைபெற்ற புத்தகக் காட்சியில் நிறுவன நூல்கள் காட்சிப்படுத்தப்பெற்றன. இப்புத்தகக் காட்சியில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன், திரு. அ. முருகசுவாமிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.








## தொல்காப்பியம் நூலின் ஒலி வடிவ அலைபேசிச் செயலி வெளியீடு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 'தொல்காப்பியம் எழுத்து' (Phonology and Morphology Mobile Application) என்ற பெயரில் எழுத்ததிகாரத்தின் செயலியைக் கூகுள் ஆண்ட்ராய்டு பிளே ஸ்டோரில் மக்கள் பயன்பாட்டிற்காக வெளியிட்டுள்ளது. இச்செயலியில் தொல்காப்பிய நூற்பா, அந்நூற்பாவின் முற்றோதல், ஆராய்ச்சிக் காண்டிகை உரை, ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகியன இடம்பெற்றுள்ளன. இச்செயலியை நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களின் வழிகாட்டுதலில், நிறுவன இளநிலை ஆய்வு வளமையர் திரு. கி. கண்ணன் வடிவமைத்துள்ளார்.




https://play.google.com/store/apps/details?id=com.cicttolkappiyameluttu

இவரே எழுதியுள்ளார். சில குறைபாடுடைத்தாயினும் இந்நூல் 'குட்டித் தொல்காப்பியம்' என்று வழங்கப்பெறுகின்றது.

இவர் இவ்வாறு தம் மனம்போன வகையில் முன்னோர் நூல்களை எடுத்துக் கையாண்டும் மாறுபட்ட இடங்களில் புதுக் கருத்துகளைப் பெய்து வைத்தும் நூலை இயற்றியுள்ளதை மறுத்து நெல்லையைச் சார்ந்த சிவஞான முனிவர் 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்ற நூலை இயற்றியுள்ளார். வைத்தியநாத தேசிகரின் புதிய கருத்துகளை இவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

மேலைநாட்டிலிருந்து சமயத்தைப் பரப்பவந்த கிறித்தவப் பாதிரியாரான வீரமாமுனிவர் என்ற பெஸ்கி பாதிரியார் 'தொன்னூல் விளக்க'த்தை இயற்றினார். வீரமாமுனிவரின் காலம் கி.பி.1680-1747 ஆகும்.

அருந்தமிழ் இலக்கணம் ஐந்தையும் விரித்து விளக்கும் தொன்னூல் விளக்கம் 370 நூற்பாக்களையுடையது. தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், யாப்பு, தண்டி முதலிய பல நூல்களைத் தழுவி இந்நூல் செய்யப்பட்டுள்ளது. சில இடங்களில் புதுப்புது மாறுதல்களையும் வீரமாமுனிவர் செய்துள்ளார்.

இலக்கணமைந்தையும் கூறும் நூல்களுள் இறுதியாகக் கூறத்தக்கது முத்து வீரியம். சென்ற நூற்றாண்டில் இந்நூல் தோன்றியிருந்தும்கூட, இது மிக அருகிய வழக்கிலேயே உள்ளது. முத்துவீர உபாத்தியாயர் என்பார் இயற்றிய இந்நூல் 1889இல் முழுதும் அச்சிடப்பெற்றது. 1286 நூற்பாக்களால் ஆகிய இந்நூலுக்குத் திருநெல்வேலியில் வாழ்ந்த திருப்பாற்கடல் நாதக்கவிராயர் உரையெழுதியுள்ளார். இவரும் முன்னோர் இயற்றிய நூற்பாக்கள் பலவற்றைத் தம் நூலில் அப்படியே பொதிந்து வைத்துள்ளார். இக்காரணத்தினாலேயே பின்னர் எழுந்த இலக்கண நூல்கள் பெருவழக்கற்றுப் போயின எனலாம்.

இனி ஐந்திலக்கணமுங் கூறாது தனித்தனி இலக்கணம் மட்டுமே கூறும் நூல்களை நோக்கலாம். எழுத்திலக்கணம் மட்டுமே கூறும் தனி நூல் இதுவரை எழவில்லை எனலாம். எழுத்தும் சொல்லும் பகரும் நூல்கள் இரண்டு. அவற்றுள் நேமிநாதம் முதலில் தோன்றிற்று. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குணவீர பண்டிதரென்னும் புலவர் நேமிநாத அடிகள் என்னும் சமண முனிவரின் பெயரால் எழுத்தும் சொல்லும் கூறும் நேமிநாதத்தை இயற்றினார். தொண்டை நாட்டைச் சார்ந்த இப்புலவர் சமண சமயச் சார்புடையவர்.

நேமிநாதத்தில் எழுத்ததிகாரம் உட்பிரிவற்றது. சொல்லதிகாரம் ஒன்பது இயல்களையுடையது. மொத்தம் 97 நூற்பாக்கள் இதில் உள்ளன. பெரும்பாலும் தொல்காப்பியரின் இலக்கண விதிகளை ஒட்டியே இந்நூலாசிரியர் தம் நூலை எழுதியுள்ளதால், தொல்காப்பியம் என்னும் கடலைக் கடக்கத் தம் நூல் ஒரு படகாகப் பயன்படுமென்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அடுத்துத் தோன்றிய நூல் நன்னூல். இது பெயரால் மட்டுமன்றி இயல்பாலும் எளிமையாலும் நன்னூலே. எழுத்தும் சொல்லும் பகரும் இந்நூலை இயற்றியவர் பவணந்தி முனிவராகும். இவர் சமண சமயத்தினர். சீயகங்கன் என்னும் கங்க நாட்டு மன்னனின் விருப்பால் எழுந்ததே நன்னூல். 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்தது இந்நூல்.

தொல்காப்பியத்தைப் பெரும்பாலும் அடியொற்றிச் சென்று கால வேறுபாட்டால் மொழியின்கண் உண்டான மாறுபாட்டைத் தம் நூலில் பவணந்தியார் குறித்து வைத்துள்ளார். மொத்தம் 462 நூற்பாக்களை நன்னூல் கொண்டுள்ளது. தொல்காப்பியத்தைக் கற்குமுன் நன்னூல் கற்க வேண்டுமென்ற பழக்கம் நீண்ட காலமாக உள்ளதால் இந்நூல் எல்லோராலும் போற்றப்பட்டு படிக்கப்பட்டு வருகின்றது. இதன் பெருவழக்கைக் கண்டு பல உரைகள் எழலாயின. விருத்தியுரையில் சிவஞான முனிவர் இயற்றியதும் காண்டிகை யுரையில் ஆறுமுக நாவலர் எழுதியதுமே பல்லோராலும் பயிலப் பெறுகின்றன.

சொல்லிலக்கணம் மட்டுமே கூறும் நூல்கள் இரண்டு பிற்காலத்தில் எழுந்தன. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சுப்பிரமணிய தீட்சிதர் 'பிரயோக விவேகம்' என்னும் நூலை இயற்றினார். தமிழுக்கும் வடமொழிக்கும் உள்ள இலக்கண ஒப்புமையைக் காட்டுவான் வேண்டிப் பெரிதும் வடமொழி இலக்கணத்தையே தழுவித் தமிழிலக்கணத்தை எழுதினார் இந்நூலாசிரியர். காரக படலம், சமாச படலம், தத்தித படலம், திங்குப் படலம் என நால்வகைப் படலங்களையுடைய இந்நூலில் 51 செய்யுள்கள் உள்ளன. இந்நூலுக்கு நூலாசிரியரே உரையுமெழுதியுள்ளார். நூலிலும் உரையிலும் முன்னெழுந்த நூல்களைப் பல இடங்களில் தழுவிச் சென்றாலும், சில இடங்களில் முன்னோரின் கருத்துகளை வன்மையாகக் கண்டிக்கின்றார்.

இந்நூலெழுந்த காலத்தையொட்டியே மற்றொரு சொல்லிலக்கண நூலான 'இலக்கணக் கொத்து'ம் தோன்றிற்று. இதை இயற்றியவர் திருநெல்வேலியைச் சார்ந்த சாமிநாத தேசிகர் ஆவர். பலர் நூல்களினும் பலர் உரைகளினும் சிதறிக்கிடந்த சில விதிகளை ஒவ்வொரு சூத்திரத்தால் ஒருங்கே அறியக் கிடத்தலின் இலக்கணக் கொத்து என்று காரணப் பெயர் பெற்றதாக நூலாசிரியரே குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர் இலக்கணத்தை மூவகையாகப் பிரித்திருக்கப் பின்வந்தோர் அதை ஐந்தாக வகைப்படுத்தினர். காப்பியர் கூறிய பொருள் பிற்காலத்தில் அகம், புறம் என்ற இருவகையைக் கொண்ட பொருளாகவும் யாப்பாகவும் அணியாகவும் பிரிவுபட்டு வளர்ச்சியுற்றது.

அகப்பொருள் இலக்கண மென்பது அகவொழுக்கத்தை விளக்குவது. இதற்கு எழுந்த முதல் இலக்கண நூல் 'இறையனாரகப் பொருள்'. அழலவர் சோதி அருமறைக் கடவுளே இதை இயற்றினார் என்று கூறுவர். இறையனார் என்னும் இயற்றமிழ்ப் புலவர் ஒருவரே இதை இயற்றியிருப்பார் என்பார் ஒரு சாரார்.

களவியல், கற்பியல் என்ற இரு பிரிவையுடைய இந்நூலில் 60 நூற்பாக்கள் உள்ளன. நூற்பாக்கள் திட்ப நுட்ப மிக்கு விளங்கினும் எளிமையானவை. இந்நூலுக்கு நக்கீரர் இயற்றியதாகக் கூறப்படும் உரையொன்றுளது. சங்க காலத்தைச் சார்ந்த நக்கீரர் இவ்வுரையை எழுதவில்லையென்றும் பிற்காலத்தில் வாழ்ந்த நக்கீரர் என்ற பெயரையுடைய வேறொருவர் இதை இயற்றியிருக்கலாமென்றுஞ் சிலர் கூறுவர்.

எவ்வாறிருப்பினும் இவ்வுரை கற்பார் மனங்களிக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை. முத்தமிழ் வளர்த்த முச்சங்கங்களைப் பற்றியும் கடல் கோளால் தமிழகத்தின் பெரும் பகுதியும் தமிழ் நூல்கள் பலவும் அழிவுற்றதைப் பற்றியும் நமக்கு முதன் முதல் எடுத்துக் கூறுவது இவ்வுரையே.

இறையனாரின் களவியலுக்குப்பின் அகப்பொருள் இலக்கணத்தை நன்கு விளக்கும் நூல் 'அகப்பொருள் விளக்கம்' என்பதாகும். பாண்டி நாட்டில் வாழ்ந்ததாகக் கூறப்படும் நாற்கவிராச நம்பி என்னும் புலவரே இந்நூலை இயற்றினார். இவர் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்.

அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்ற ஐந்து இயல்களோடு விளங்கும் இந்நூலில் மொத்தம் 252 நூற்பாக்கள் உள்ளன. தமிழரின் அகவொழுக்கத்தைப் பற்றி மிகச் சிறந்த முறையில் விரிவாக இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. இந்நூலுக்கு நூலாசிரியர் உட்படப் பலர் உரையெதியுள்ளனர்.

இதற்குப் பின்னெழுந்த 'களவியற் காரிகை' அகப்பொருளை விளக்கும் நூலே. இதன் ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. இந்நூல் முழுதும் கிடைக்கப் பெறவில்லை. கிடைத்த 53 நூற்பாக்களை மட்டும் எஸ். வையாபுரிப்பிள்ளை வெளியிட்டுள்ளார். இதற்குச் சிறந்த உரையும் உள்ளது.

'தமிழ் நெறி விளக்க' மென்னும் நூல் அகப்பொருளை மட்டும் விளக்கும் 25 நூற்பாக்களையுடையது. இஃது ஐந்திலக்கணத்தையும் விளக்க எழுந்த பெரு நூலென்பர்.

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பார் 'மாறனகப் பொருள்' என்னும் அகப்பொருளிலக்கண நூலை இயற்றியுள்ளார். இதிலும் நம்பியகப் பொருளில் உள்ளதைப் போலவே ஐந்து இயல்கள் உள்ளன. ஆனால் இப்பொழுது கிடைத்திருப்பன நடுமூன்று இயல்களே. இவற்றில் 106 நூற்பாக்கள் உள்ளன. தொல்காப்பியத்தையும் நம்பி யகப்பொருளையும் பெரும்பாலும் ஒத்து சிறிது வேறுபட்டும் இந்நூல் காணப்படுகின்றது.

நான்காவது பிரிவான யாப்பு என்பது செய்யுள்களை யாக்கும் முறையை விளக்குவது. எப்பொருளையும் பாவடிவிலேயே இயம்புவது என்பது பழைய முறை. எனவே பாவியற்றும் முறையை விளக்கப் பல நூல்கள் எழலாயின. முத்தமிழ் வித்தகரான அகத்தியர் பாட்டியல் ஒன்றை இயற்றியதாகக் கூறுவர். சங்க காலத்தில் வாழ்ந்த காக்கை பாடினியார் பெருங் காக்கை பாடினியம், சிறு காக்கை பாடினியம் என்று இரு பாட்டியல் நூல்களை இயற்றியதாகத் தெரிகின்றது. இவ்வாறே நத்தத்தனார் இயற்றிய நத்தத்தம், பிற அவிநயப் புறனடை, செய்யுளியல் போன்ற பல நூல்கள் தோன்றி மறைந்து விட்டன.

இப்பொழுது நமக்குக் கிடைக்கும் நூல்களில் பழமையானது 'யாப்பருங்கலம்' என்னும் நூலாகும். 10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த அமிர்தசாகரனார் இந்நூலை இயற்றினார். இவர் சமணர். உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று இயல்களையுடைய இந்நூலில் 96 நூற்பாக்கள் உள்ளன. வெண்பா முதலான ஐவகைப் பாக்களுக்கு இது இலக்கணம் கூறுகின்றது. இதற்கு குணசாகரர் என்னும் புலவர் விருத்தியுரை எழுதியுள்ளார்.

யாப்பருங்கலத்தை இயற்றிய அமிர்தசாகரரே அதன் சுருக்கமான யாப்பருங்கலக்காரிகையையும் இயற்றினார். யாப்பிலக்கண விதிகளைக் கட்டளைக் கலித்துறைகளில் கூறியதனாலும் செய்யுள்கள் அனைத்தும் மகடூஉ முன்னிலையாக அமைந்திருத்தலானும் காரிகை என்ற பெயர் சூட்டப்பெற்ற தென்பர்.

உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று இயல்களையுடைய இந்நூலில் மொத்தம் 60 காரிகைகள் உள்ளன. உறுப்பியல் செய்யுளின் உறுப்புகளையும் செய்யுளியல் பாவும் பாவினங்களையும் ஒழிபியல் முற்கூறப்பட்ட இரு இயல்களில் கூறாப்பெறாத செய்திகளையும் விளக்குகின்றன. கவி பாடுவோர்க்கு இந்நூல் மிக்க துணையாக உள்ளதால் காரிகை கற்காத தமிழ்ப் புலவர்களே இருக்க மாட்டார்கள் என்று துணியலாம். யாப்பருங்கலத்திற்கு விருத்தியுரை செய்த குணசாகரரே காரிகைக்கும் உரை செய்துள்ளார். காரிகை தோன்றிய பின்னர் யாப்பைப் பற்றிய நூல்கள் பல எழுந்தனவெனினும், காரிகையின் வழக்கு சற்றேனும் குறையவில்லை.

காரிகைக்குப்பின் தோன்றிய பாட்டியல் நூல்களுள் முதன்மையானது ‘பன்னிரு பாட்டியல்’ ஆகும். இது ஒரு தொகுப்பு நூல். பொய்கையார், பரணர் போன்ற புலவர் பதின்மூன்று பேர் பாடிய 358 நூற்பாக்கள் இதில் உள்ளன. இப்புலவர்களின் பெயர்கள் இவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களோ என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கலாம். ஆனால் நூலின் நடையையும் அமைப்பையும் நோக்கும்போது இது கி.பி.10 அல்லது 11ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாமெனத் தெரிகிறது. 66 வகை சிறு பிரபந்தங்களின் இலக்கணத்தை இது விளக்குகின்றது.

வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல் வெண்பாக்களால் யாப்பிலக்கணத்தை விளக்குவது. குணவீர பண்டிதர் தம் ஆசிரியரான வச்சணந்தி முனிவரைச் சிறப்பிக்கும் பொருட்டுத் தம் நூலுக்கு வச்சணந்தி மாலை என்ற பெயரைச் சூட்டியிருக்கலாம். இவர் கி.பி.12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மொழியியல், செய்யுளியல், பொதுவியலென மூன்று இயல்கள் இந்நூலிலுள்ளன. மொத்தம் 103 வெண்பாக்கள் இதில் உள்ளன. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு.

இதை அடுத்துத் தோன்றிய பாட்டியல் நூல் நவநீதப் பாட்டியல் ஆகும். இதன் ஆசிரியர் நவநீத நடன் ஆவர். பரத நாட்டியத்திற் சிறந்தவரான இவர் நடனத்தை யொட்டிப் பாடப் பெறும் பாடல்களுக்கு இலக்கணம் கூறவே இந்நூலை எழுதினாரென்பர். முதல் மொழியியல், செய்யுள் மொழியியல், பொது மொழியியல் என மூன்று பிரிவுகளையுடைய இந்நூல் 102 கட்டளைக் கலித்துறைகளாலானது. பழைய உரையுடன் கூடிய இந்நூலின் காலம் கி.பி.13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

‘வரையறுத்த பாட்டியல்’ என்பது கட்டளைக் கலித்துறைகளாலான பத்துச் செய்யுள்களில் பாட்டியல் கூறும் பொருத்தங்கள் பத்தினுள் மங்கலப் பொருத்தத்தை மட்டும் எடுத்துக்கொண்டு அது இன்னது என்று வரையறுத்துக் கூறுவது.

கி.பி.15ஆம் நூற்றாண்டில் எழுந்த ‘சிதம்பரப் பாட்டியல்’ ஆசிரியர் பரஞ்சோதியாரால் இயற்றப்பெற்றது. தனிநிலைச் செய்யுளுக்கும் தொடர்நிலைச் செய்யுளுக்கும் இலக்கணம் கூறும் இந்நூலில் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என ஐந்து இயல்கள் உள்ளன. மொத்தம் 47 எண் சீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தங்களைக் கொண்டது இந்நூல். இதன் முதன் மூன்று இயல்களுக்கு உரை உள்ளது. இது யாப்பருங்கலக் காரிகை போல் யாப்பிலக்கணம் முழுவதையுமே கூறும் நூலாகும்.

மாறன் பாப்பாவினமென வழங்கப்பெறும் பாப்பாவினம் வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, மருட்பா என்ற ஐவகைப் பாக்களுக்கும் பாவினங்களுக்கும் பரிபாடலுக்கும் இலக்கணமும் இலக்கியமும் இயம்புகின்றது. இதன் ஆசிரியர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இவர் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மொத்தம் 140 பாடல்கள் இதில் உள்ளன.

கி.பி.17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபரர் இயற்றிய நூல் சிதம்பரச் செய்யுட் கோவை. இது ஐவகைப் பாவின் இலக்கணம் கூறுவது. மொத்தம் 84 செய்யுட்கள் இதில் உள்ளன. பெரும்பாலும் காரிகையைத் தழுவியே இந்நூலெழுதப்பட்டுள்ளது.

வேம்பத்தூர் பாப்புவையர் என்ற முத்து வேங்கட சுப்பையர் ‘பிரபந்த தீபிகை’ என்ற 96 வகை பிரபந்தங்களின் இலக்கணம் கூறும் நூலொன்றை இயற்றியதாகத் தெரிகிறது.

பாவகைகளில் வண்ணப்பா என்பது ஒரு வகை. இதன் இலக்கணத்தை விரித்துக்கூற மகான் வண்ணச் சரபம் திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள் ‘வண்ணத்தியல்பு’ என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர் இவர்.

சென்னை டி. வீரபத்திர முதலியார் என்பார் தமிழ் இலக்கியத்தில் பிற்காலத்தில் பெரு வழக்கிலிருந்த விருத்தப் பாவிற்கு இலக்கணம் வகுத்துள்ளார். 'விருத்தப்பாவியல்' என்னும் இந்நூல் 182 நூற்பாக்கள் கொண்ட பன்னிரண்டு படலங்களையுடையது. விருத்தப்பாவின் வகைகளுக்கு விரிவான இலக்கணம் கூறுவது இது ஒன்றே. இந் நூலாசிரியரின் காலம் 1855 - 1910 ஆகும்.

ஐந்தாவது இலக்கணமாகிய அணியிலக்கணத்தைப் பற்றித் தனி நூல்கள் சில தோன்றின. தொல்காப்பியர் உவமை அணி ஒன்றை மட்டுமே சிறப்பாக எண்ணியதால் அணியியல் என்று தனியாகக் கூறாது உவமையிலேயே அதை அடக்கிவிட்டார். அணியிலக்கணம் கூறும் நூல்களுள் சிறந்தது தண்டியலங்காரம். தண்டி என்னும் புலவர் இயற்றிய இவ்வணியிலக்கணம் வடமொழி இலக்கணத்தைத் தழுவி எழுதப்பட்டது என்பர்.

பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் மூன்று இயல்களையுடைய இந்நூலில் 126 நூற்பாக்கள் உள்ளன. பெருங்காப்பியமும் சிறுகாப்பியமும் இன்னவாறு அமைய வேண்டுமென்று இந்நூல் கூறுகின்றது. இதன்கண் தன்மை முதலாக பாவிகம் ஈறாக 35 அணிகளுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இந்நூல் தோன்றிய காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டாகும்.

அகப் பொருளுக்கும் யாப்புக்கும் தனித்தனி இலக்கண நூல்கள் எழுதிய திருக்குருகைப் பெருமாள் கவிராயர் அணியிலக்கணத்தை விளக்க 'மாறனலங்காரம்' என்ற நூலை இயற்றியுள்ளார். பாயிரம், பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்னும் ஐந்து இயல்கள் இந்நூலில் உள்ளன. இதில் 64 அணிகளுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மொத்தம் 327 நூற்பாக்கள் இதன்கண் இடம்பெற்றுள்ளன. காரிரத்தினக் கவிராயர் என்பார் இயற்றிய உரை இந்நூலுக்கு உள்ளது. கி.பி.16ஆம் நூற்றாண்டில் எழுந்த நூல் இது.

அணியிலக்கணம் கூறும் நூலுள் அடுத்துக் குறிப்பிடத்தக்கது 'குவலயானந்தம்' என்பது. வடமொழி இலக்கணத்தைப் பெரிதும் தழுவி எழுதப்பட்டது இந்நூல். இதை இயற்றியவர் மாணிக்கவாசகர். கி.பி.19ஆம் நூற்றாண்டில் எழுந்தது இது.

மு. இராகவையங்காரின் தந்தையரான முத்துசாமி ஐயங்கார் வடமொழி அணி இலக்கண நூலான சந்திரா லோகத்தை ஆசிரியப்பாவில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப் பெற்றுள்ளது.

இதுவரை ஐந்திலக்கணம் கூறும் நூல்களையே பார்த்தோம். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகள் 'அறுவகையிலக்கணம்' என்ற நூலையியற்றியுள்ளார். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்தோடு புலமையிலக்கணம் என்ற ஒன்றையும் சேர்த்து அறுவகையிலக்கணம் என்று பெயரிட்டுள்ளார். ஆனால், நூலிலும் புணர்ச்சி இலக்கணமும் சொல்லிலக்கணமும் கூறும் ஏழாமிலக்கணம் என்ற ஒரு பிரிவையும் சேர்த்துள்ளார். இந்த ஏழு பிரிவுகளிலும் மொத்தம் 319 நூற்பாக்கள் உள்ளன.

அகத்தியர் முத்தமிழுக்கும் இலக்கணம் வகுத்ததாகக் கூறுவர். ஆனால் அது மறைந்து போயிற்று. அகத்தியர் என்ற பெயரையுடைய வேறொரு புலவர் இயற்றியதாகக் கருதப்படும் நூற்பாக்கள் பேரகத்தியத் திரட்டு என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளன. இவற்றை முதலில் தொகுத்து வெளியிட்டவர் களத்தூர் வேதகிரி முதலியார். அதன்பின் 1912இல் வேறு சில நூற்பாக்களையும் சேர்த்து ச. பவாநந்தம் பிள்ளை வெளியிட்டுள்ளார். இதில் 164 நூற்பாக்கள் உள்ளன. நூல் ஐந்து படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**- இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு,**
**கலைக் காட்சிக் குழு வெளியீடு, சென்னை, 1968, பக்.39 – 45.**

## தமிழ்ச் செவ்விலக்கியங்கள்
## - மலையாள மொழிபெயர்ப்புத் திட்டத் தேர்வுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ்ச் செவ்விலக்கியங்களை மலையாள மொழியில் மொழிபெயர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டத்திற்கான மொழிபெயர்ப்பாளர்களைத் தேர்வு செய்வதற்கான தேர்வுக் குழுக் கூட்டம் 17.03.2023 அன்று நிறுவனத்தில் நடைபெற்றது. நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேராசிரியர் சி.ஜி. ராஜேந்திர பாபு வல்லுநராகக் கலந்துகொண்டு மொழிபெயர்ப்பாளர்களைத் தேர்வுசெய்தார். நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரி இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

# கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் 2023ஆம் ஆண்டிற்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேராசிரியர் க. இராமசாமி அவர்களுக்கு 05.09.2023 அன்று வழங்கிச் சிறப்பித்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறைச் செயலாளர் மரு. ஆர். செல்வராஜ், இ.ஆ.ப., நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




# ஆய்வு உதவித்தொகைகள்

செம்மொழித் தமிழ் நூல்கள் நாற்பத்தொன்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் உதவித்தொகைகள் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றது. அதன்படி 2023ஆம் ஆண்டு பின்வரும் முனைவர் பட்ட மேலாய்வாளர் ஒருவரும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பத்துப் பேரும் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**முனைவர் பட்ட மேலாய்வாளர்**

1. முனைவர் ஆ. பூபாலன்

**முனைவர் பட்ட ஆய்வாளர்கள்**

1. ஸ்ரீ. ஸ்ரீரஞ்சனி
2. க. தங்கமாரியப்பன்
3. சு. திலகவதி
4. கு. வடிவேல்
5. ர. சதீஷ்
6. வே. செவ்வந்தி
7. அ. நாகஜோதி
8. ர. பிருந்தா
9. மு. காயத்ரி
10. ரா. திலகவதி

# நிறுவன விழாக்கள்

## குடியரசு நாள் விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 26.01.2023 அன்று நாட்டின் 74ஆவது இந்தியக் குடியரசு நாளையொட்டி நடைபெற்ற விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்துச் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.





## தாய்மொழி நாள் விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 21.02.2023 அன்று தாய்மொழி நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் தலைமையுரையும், பேராசிரியர் தெ. ஞானசுந்தரம் அவர்கள் சிறப்புரையும் ஆற்றினர். விழாவில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.









## மகளிர் நாள் விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 08.03.2023 அன்று நடைபெற்ற மகளிர் நாள் விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார். இவ்விழாவில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.








## பன்னாட்டு யோகா நாள் விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 21.06.2023 அன்று ஒன்பதாவது பன்னாட்டு யோகா நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களும், நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்களும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர். யோகா ஆசிரியர் திரு. இரா. அருண்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கு யோகாசனப் பயிற்சியளித்தார்.







## இந்திய அரசியலமைப்பு நாள் உறுதிமொழி ஏற்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 26.11.2023 அன்று இந்திய அரசியலமைப்பு நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, நிதி அலுவலர் திரு. ஆ. குமரேசன், நிறுவனப் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு உறுதிமொழி ஏற்றனர்.


## நிறுவன வரவுசெலவுத் தணிக்கை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 31.08.2023 முதல் 06.09.2023 வரை நடுவண் கணக்குத் தணிக்கை அலுவலர்களால் 2022 - 2023ஆம் ஆண்டிற்கான நிறுவன வரவுசெலவுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன.

## விடுதலைத் திருநாள் விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 15.08.2023 அன்று நாட்டின் 77ஆவது விடுதலைத் திருநாளையொட்டி நடைபெற்ற விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தித் தலைமையுரை ஆற்றினார். நிறுவனத் துணைத்தலைவர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்களும், நிறுவனப் பணியாளர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.









**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.** *(குறள்.398)*

## செம்மொழி நாள் விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 12.10.2023 அன்று செம்மொழி நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராகப் பேராசிரியர் இராம. குருநாதன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.












# மருத்துவ முகாம்கள்

## 1

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 05.01.2023 அன்று சென்னை, குளோபல் மருத்துவமனையின் பொது மருத்துவப் பரிசோதனை முகாம் நடைபெற்றது. நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் அவர்கள் மருத்துவ முகாமைத் தொடங்கி வைத்தார். இம்முகாமில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.







## 2

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 30.08.2023 அன்று சென்னை, குளோபல் மருத்துவமனையின் பொது மருத்துவ முகாமும் இதயம், பல் குறித்த சிறப்பு மருத்துவ முகாமும் நடைபெற்றது. நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் மருத்துவ முகாமைத் தொடங்கி வைத்தார். இம்முகாமில் நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்களும், நிறுவனப் பணியாளர்களும் கலந்துகொண்டனர்.





## 3

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 06.11.2023 அன்று சென்னை, குளோபல் மருத்துவமனையின் புற்றுநோய் மற்றும் மனவளம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் அவர்கள்






இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்களும், நிறுவனப் பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

# காசித் தமிழ்ச் சங்கமம் - 2.0

உத்தரப்பிரதேச மாநிலம், வாரணாசி நகரின் நமோ படித்துறையில் 17.12.2023 முதல் 30.12.2023 வரை காசித் தமிழ்ச் சங்கமம் நடைபெற்றது. மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் காசித் தமிழ்ச் சங்கமத்தின் தொடக்க விழாவில் நிறுவன நூல்களை வெளியிட்டுச் சிறப்பித்தார். மேதகு தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி அவர்கள் 15.12.2023 அன்று சென்னை மத்தியத் தொடர்வண்டி நிலையத்தில் நடைபெற்ற விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் 'தமிழர் மரபில் காசி' என்ற நூலையும், அதன் ஆங்கில, இந்தி மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டார். இச்சங்கமத்தில் செம்மொழி நிறுவனம் புத்தகக் காட்சி அரங்கு, பல்லூடக அரங்கு ஆகிய இரு அரங்குகளை அமைத்தது. இவ்வரங்குகளின் பொறுப்பாளர்களாக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன், திரு. அ. முருகசுவாமிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.





காசித் தமிழ்ச் சங்கமத்தில் 20.12.2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அரங்கில் வட இந்தியப் பள்ளி மாணவர்களுக்கான வினாடி - வினா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

*21.12.2023 அன்று நிறுவன அரங்கில் வட இந்தியப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழ்க் கற்றல் நிகழ்ச்சியும் பனாரஸ் இந்து பல்கலைக்கழக மாணவர்களுக்குத் திருக்குறள் கற்றல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்வில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றுத் தமிழ் மொழிச் சொற்களையும் திருக்குறளையும் கற்றனர்.*
























22.12.2023 அன்று நிறுவன அரங்கில் வட இந்தியப் பள்ளி மாணவர்களுக்குப் பாரதியார் கவிதைகளை வாசிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பாகச் செயல்பட்ட மாணவர்களுக்கு நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார். காசித் தமிழ்ச் சங்கமத்தின் அனைத்து நாட்களிலும் தமிழ் மொழி குறித்துச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.




## அகத்தியர் நாள் விழா

உத்தரப்பிரதேசம், வாரணாசியில் நடைபெற்ற காசித் தமிழ்ச் சங்கமத்தில் 29.12.2023 அன்று அகத்தியர் பிறந்த நாள் விழாவைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் கொண்டாடியது. நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக இந்திய முறை மருத்துவக் குழுமத்தின் தலைவர் மரு. ரகுராம் பட்டா, உச்சநீதிமன்ற வழக்கறிஞர் திரு. ஷாமா பட், பேராசிரியர் கமலேஷ் துவேதி, மத்தியக் கல்வி அமைச்சகப் புள்ளிவிவரத் துறையின் துணை இயக்குநர் திரு. ஆர். ராஜேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வை நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் த. சரவணன் ஒருங்கிணைத்தார். இளநிலை எழுத்தர் திரு. க. சங்கர், தரவு உள்ளீட்டாளர் திரு. தி.ஞா. அருள்ஒளி ஆகியோர் இணை ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டனர்.









# சிறப்பு விருந்தினர்கள் வருகை

## செம்மொழி நிறுவனத்திற்கு மொழிகள் நிறுவன இயக்குநர்கள் வருகை

*பேரா. சைலேந்திர மோகன் (இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு), பேரா. சி.வி. சிவராமகிருஷ்ணா (தலைவர், செம்மொழிகள் பிரிவு, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு), பேரா. எம். சம்பத்குமார் (இயக்குநர், செம்மொழித் தெலுங்கு மையம், ஆந்திரப் பிரதேசம்), பேரா. எம்.என். தல்வார் (இயக்குநர், செம்மொழிக் கன்னட மையம், கர்நாடகம்), பேரா. பி.கே. பாண்டா (இயக்குநர், செம்மொழி ஒடியா மையம், ஒடிசா), பேரா. இராதாகிருஷ்ணன் (இயக்குநர், செம்மொழி மலையாள மையம், கேரளம்) ஆகியோர் 11.01.2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வருகைபுரிந்து நிறுவனத்தைப் பார்வையிட்டனர். நிறுவனப் பணிகள் குறித்துச் செம்மொழி நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களிடம் கேட்டறிந்தனர்.*






## பனாரஸ் இந்து பல்கலைக்கழக மாணவர்கள் வருகை

*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு 12.04.2023 அன்று பனாரஸ் இந்து பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள் முனைவர் த. ஜெகதீசன், முனைவர் சு. விக்னேஷ் ஆனந்த், தமிழக ஆளுநரின் துணைச் செயலாளர் திரு. பிரசன்ன ராமசாமி ஆகியோருடன் பனாரஸ் இந்து பல்கலைக்கழக மாணவர்களும் வருகைபுரிந்தனர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் செம்மொழி நிறுவனம் மேற்கொண்டுவரும் பணிகள் குறித்து அவர்களுக்கு எடுத்துக்கூறினார். நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றார்.*






## பேராசிரியர் பிரான்சிஸ் எக்ஸ். குளூனி வருகை

*அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழக இறையியல் பள்ளியின் பேராசிரியர் பிரான்சிஸ் எக்ஸ். குளூனி அவர்கள் 28.06.2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வருகைபுரிந்து, நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் அவர்களிடம் வைணவ இலக்கிய நூல்களின் மொழிபெயர்ப்புக் குறித்துக் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, நந்தனம் அரசினர் ஆடவர் கலைக் கல்லூரித் தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் க. பலராமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.*



# 2023ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற நூல்கள்





## பிரெயில் நூல்களின் பட்டியல்


| வ. எண் | நூல் | தொகுதி |
|---|---|---|
| 1. | தொல்காப்பியம் மூலமும் உரையும் | 8 |
| 2. | நற்றிணை மூலமும் உரையும் | 7 |
| 3. | குறுந்தொகை மூலமும் உரையும் | 4 |
| 4. | ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 4 |
| 5. | பதிற்றுப்பத்து மூலமும் உரையும் | 3 |
| 6. | பரிபாடல் மூலமும் உரையும் | 3 |
| 7. | கலித்தொகை மூலமும் உரையும் | 6 |
| 8. | அகநானூறு மூலமும் உரையும் | 9 |
| 9. | புறநானூறு மூலமும் உரையும் | 6 |
| 10. | திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் | 1 |
| 11. | பொருநராற்றுப்படை மூலமும் உரையும் | 1 |
| 12. | சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும் | 1 |
| 13. | பெரும்பாணாற்றுப்படை மூலமும் உரையும் | 1 |
| 14. | மதுரைக்காஞ்சி மூலமும் உரையும் | 2 |
| 15. | முல்லைப்பாட்டு மூலமும் உரையும் | 1 |
| 16. | பட்டினப்பாலை மூலமும் உரையும் | 1 |
| 17. | நெடுநல்வாடை மூலமும் உரையும் | 1 |
| 18. | குறிஞ்சிப்பாட்டு மூலமும் உரையும் | 1 |
| 19. | மலைபடுகடாம் மூலமும் உரையும் | 2 |
| 20. | நாலடியார் மூலமும் உரையும் | 2 |
| 21. | பழமொழி நானூறு மூலமும் உரையும் | 2 |
| 22. | திருக்குறள் மூலமும் உரையும் | 3 |
| 23 & 24. | இன்னாநாற்பது, இனியவைநாற்பது மூலமும் உரையும் | 1 |
| 25 & 26. | கார்நாற்பது, களவழிநாற்பது மூலமும் உரையும் | 1 |
| 27 & 28. | ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது மூலமும் உரையும் | 1 |
| 29 & 30. | திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும் | 1 |
| 31 & 32. | திரிகடுகம், கைந்நிலை மூலமும் உரையும் | 1 |
| 33 & 34. | ஆசாரக்கோவை, முதுமொழிக்காஞ்சி மூலமும் உரையும் | 1 |
| 35. | நான்மணிக்கடிகை மூலமும் உரையும் | 1 |
| 36 & 37. | சிறுபஞ்சமூலம், ஏலாதி மூலமும் உரையும் | 1 |
| 38. | சிலப்பதிகாரம் மூலமும் உரையும் | 8 |
| 39. | மணிமேகலை மூலமும் உரையும் | 6 |
| 40. | இறையனார் களவியல் மூலமும் உரையும் | 4 |
| 41. | முத்தொள்ளாயிரம் மூலமும் உரையும் | 1 |
| 42. | நன்னூல் மூலமும் உரையும் | 4 |
| 43. | புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும் | 5 |
| 44. | யாப்பருங்கலக்காரிகை மூலமும் உரையும் | 3 |
| 45. | தண்டியலங்காரம் மூலமும் உரையும் | 4 |
| 46. | நம்பியகப்பொருள் மூலமும் உரையும் | 6 |
| | மொத்த தொகுதிகள் | 118 |

# ஆய்வு நூல்கள்



தமிழர் அளவை முறைகள்
MEASUREMENT SYSTEMS OF THE TAMILS
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023



தமிழக மீனவர் தொழில் - பண்பாட்டுச் சொல்லகராதி
A DICTIONARY OF OCCUPATIONAL AND CULTURAL TERMS OF THE FISHERFOLK OF TAMIL NADU
இரா. சந்திரசேகரன்
சு. ஏழுமலை
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023


Le Kuruntokai
குறுந்தொகை
Kuruntokai
(French)
S. A. VENGADA SOUPRAYA NAYAGAR
Central Institute of Classical Tamil
Chennai - 600 100
2023



APPLIED LINGUISTIC READINGS OF
TOLKĀPPIYAM
V. MURUGAN
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL, CHENNAI
2023



கல்வெட்டுச் சொற்களின் பொருட்புல அடைவு
பா. ரா. சுப்பிரமணியன்
ப. சண்முகம்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023


செம்மொழித் தமிழ் நூல்களில் தொன்மக் கூற்றுகளும் அவற்றின் கலை வடிவங்களும்
குடவாயில் மு. பாலசுப்பிரமணியன்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
2023



தமிழ் இலக்கியமும் தமிழகத்துக் கலைப் படைப்புகளும்
குடவாயில் மு. பாலசுப்பிரமணியன்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
2023


செவ்வியல் தமிழில் கிளைமொழிகள்:
ஒரு வரலாற்று அளவீடு
மொழி
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023


சங்க இலக்கியத்தில் சைவ சமய மூலக் கூறுகள்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023


கால்நடை வளர்ப்புக் கலைச்சொல்லகராதி
A DICTIONARY OF TECHNICAL TERMS OF ANIMAL HUSBANDRY
இரா. சந்திரசேகரன்
சு. ஏழுமலை
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023


திருப்புடைமருதூர் ஓவியங்கள்
சா. பாலுசாமி
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்,
2023


PRESENCE OF ANCIENT TAMIL WORDS IN OTHER INDIAN LANGUAGES
R. MADHIVANAN
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL, CHENNAI
2023


செவ்வியல் நூல்களில் அளவைகள்
ப. சத்யா
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023



விளவங்கோடு வட்டார வழக்குகளில் செவ்வியல் மொழிக்கூறுகள்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023



சங்க இலக்கிய உரைகளில் இலக்கணக் குறிப்புகள்
சு. அழகேசன்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023


சங்ககாலக் கடற்கரையோரக் குடியிருப்புகளும் துறைமுகங்களும்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2023

# ஆய்வு நூல்கள்


























<< குறுவட்டு


## மொழிபெயர்ப்பு நூல்கள்

















# மொழிபெயர்ப்பு நூல்கள்











































# பணிக்குழாம்

## இயக்குநர்
## பேராசிரியர் இரா. சந்திரசேகரன்

பதிவாளர்
**முனைவர் ரெ. புவனேஸ்வரி**

நிதி அலுவலர்
**திரு. ஆ. குமரேசன்**

*ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் கூ.மு. புவனேஸ்வரி

முனைவர் ந. தேவி

முனைவர் இரா. அருள்மணி

முனைவர் கு. ஜெயகுமாரி

*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்

முனைவர் சு. ஏழுமலை

முனைவர் மு. செல்வதுரை

முனைவர் சே. கரும்பாயிரம்

முனைவர் த. சரவணன்

முனைவர் இரா. வெங்கடேசன்

முனைவர் ந. பெரியசாமி

முனைவர் வ. மாரியப்பன்

முனைவர் ம. தமிழ்வாணன்

முனைவர் அ. ஆரோக்கியதாசு

முனைவர் மா. சுசிலா

முனைவர் ப. கண்ணதாசன்

முனைவர் சுப. வேல்முருகன்

முனைவர் வே. அழகுமுத்து

முனைவர் ம. நாகராஜன்

முனைவர் சி. இராமச்சந்திரன்

*இளநிலை ஆய்வு வளமையர்கள்*

திருமதி ம. தாமரைச்செல்வி

திரு. து.ச.ரா. ராஜேஷ்குமார்

திரு. கி. கண்ணன்

திரு. கோ. சந்திரசேகர்

*தொழில்நுட்பப் பணியாளர்கள்*

திரு. சு. கார்த்திகேயன் *(நிரலாளர்)*

திரு. த. செந்தில்குமார் *(நிரலாளர்)*

முனைவர் இரா. அகிலன் *(நிரலாளர்)*

திரு. அ. முருக சுவாமிநாதன் *(நிரலாளர்)*

திரு. இரா. சுந்தரகணபதி *(கணினி நிருவகிப்பாளர்)*

திரு. மு. இராசசேகர் *(இணையத்தள வடிவமைப்பாளர்)*

*நிருவாகப் பணியாளர்கள்*

திரு. கோ. புண்ணியமூர்த்தி
*(அலுவலகக் கண்காணிப்பாளர்)*

திரு. ஜா.வா. பாஸ்கரன்
*(இளநிலைக் கணக்கு அலுவலர்)*

திரு. மோ. முருகானந்தம் *(முதுநிலை எழுத்தர்)*

திரு. க. சங்கர் *(இளநிலை எழுத்தர்)*

திரு. அ. முருகேசன் *(இளநிலை எழுத்தர்)*

திருமதி இர. நளினா *(இளநிலை எழுத்தர்)*

*தரவு உள்ளீட்டாளர்கள்*

திரு. வெ. சிவப்பிரகாசம்

திருமதி சு. கீதா

திரு. தி.ஞா. அருள்ஒளி

திரு. மு. முனியசாமி

திரு. சோ. சரவணன்

*அனுப்புகை உதவியாளர்*

திரு. ம. கோவிந்தன்

*பன்னோக்கு உதவியாளர்கள்*

திருமதி ந. ஜெயலட்சுமி

திருமதி சி. அன்னபூரணி

**தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை**

நற்றிணை
குறுந்தொகை
ஐங்குறுநூறு
பதிற்றுப்பத்து
பரிபாடல்
கலித்தொகை
அகநானூறு
புறநானூறு

**பத்துப்பாட்டு**

திருமுருகாற்றுப்படை
பொருநராற்றுப்படை
சிறுபாணாற்றுப்படை
பெரும்பாணாற்றுப்படை
முல்லைப்பாட்டு
மதுரைக்காஞ்சி
நெடுநல்வாடை
குறிஞ்சிப்பாட்டு
பட்டினப்பாலை
மலைபடுகடாம்

**பதினெண் கீழ்க்கணக்கு**

நாலடியார்
நான்மணிக் கடிகை
இன்னா நாற்பது
இனியவை நாற்பது
கார்நாற்பது
களவழி நாற்பது
ஐந்திணை ஐம்பது
ஐந்திணை எழுபது
திணைமொழி ஐம்பது
திணைமாலை நூற்றைம்பது
பழமொழி நானூறு
சிறுபஞ்ச மூலம்
திருக்குறள்
திரிகடுகம்
ஆசாரக் கோவை
முதுமொழிக் காஞ்சி
ஏலாதி
கைந்நிலை

**சிலப்பதிகாரம்**
**மணிமேகலை**
**முத்தொள்ளாயிரம்**
**இறையனார் களவியல்**